REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 15 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :139 பங்குனி 31ஆம் நாள் திங்கட்கிழமை 13 ஏப்ரல் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

**வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள் அனைவருக்கும் உதயனின் புத்தாண்டு வாழ்த்துக்கள்**

**வீட்டில் இருந்தே கொண்டாடி மகிழ்ந்து, கொரோனா விரட்ட துணை நிற்போம்**




## புத்தளத்திலிருந்து வந்தோரால் முல்லைத்தீவில் பெரும் அச்சம்

முல்லைத்தீவு, ஏப். 13

படகு மூலம் முல்லைத்தீவு க்கு வந்து சேர்ந்த புத்தளம் மாவட்டத்தவர்களால், முல்லைத்தீவு மக்கள் பெரும் அச்சமடைந் துள்ளனர். புத்தளம் மாவட்டத்திலிருந்து அதிகளவு கொரோனா நோயாளிகள் கண் டுபிடிக்கப்பட்டு அந்த மாவட்டம் பெரும் இடர் வலயமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அங்கிருந்து முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 9 பேர் வந்து

02

## புத்தாண்டு கொண்டாட்டம் வேண்டாம்

கொழும்பு, ஏப். 13

நாட்டில் தமிழ், சிங்கள புத் தாண்டு கொண்டாட்டங் களை முன்னெடுக்க வேண்டாம் என்று பொது மக்களிடம் பொலிஸார் கேட் டுள்ளனர்.

02

# இலங்கையில் பேராபத்து இன்னும் குறையவில்லை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

**கொழும்பு,ஏப்.13**

**இலங்கையில் கொரோனா வைரஸால் பாதிக் கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைவ டையலாம் என நாம் எதிர்பார்த்தோம். ஆனால், நாள்தோறும் அதிகரிக்கின்றது. இதுவரை 203 பேர் பாதிப்படைந்துள்ளனர். கொரோனா வின் பேராபத்து இங்கு இன்னமும் குறைய வில்லை. எனவே, மக்கள் தொடர்ந்து அவதா னமாகச் செயற்பட வேண்டும்.**

**இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க நேற்று தெரிவித்தார்.**

02

## கொரோனா தொற்று 210

கொழும்பு.ஏப்.13

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 12 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்க மைவாக தொற்றுக்குள்ளான வர்களின் எண்ணிக்கை 210 ஆக அதிகரித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவருக் கும் கொரோனா தொற்று இருப்பது நேற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

02

## தாவடிக்கு இன்று விடுதலை

யாழ்ப்பாணம், ஏப். 13

கடந்த மாதம் 23ஆம் திகதியிலிருந்து தனி மைப்படுத்தப்பட்டிருந்த தாவடிக் கிராமம் இன்று காலை 6 மணியுடன் விடுவிக்கப்படவுள்ளது. இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகா தார சேவை

02

## 56 பேர் நலம்; 140 பேர் சிகிச்சையில்

கொழும்பு.ஏப்.13

இலங்கையில் கொரோ னா வைரஸ் தொற்றுக் குள்ளான மேலும் இரு வர் குணமடைந்து நேற்று வீடு திரும்பி யுள் ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித் துள்ளது.

அதற்கமைவாக, இலங் கையில் கொரோனா வைரஸ்

02

## இராணுவ தளபதி வடக்குக்கு 'விசிட்'

கிளிநொச்சி, ஏப். 13

கொரோனாத் தொற்றுச் சூழ் நிலையில், அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் இராணுவத் தினரின் பணிகளை பாராட்டும் வகையில், இராணுவத்தளபதி நேற்று வடக்கு மாகாணத்தி லுள்ள பல இராணுவ முகாம் களுக்குச் சென்றிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுக் காலை மாங்குளம் பகுதிக்குச் சென்ற அவர் கிளி நொச்சி இராணுவத் தலைமை யகத்தில் படை வீரர்களுடன் சந்திப்பில் ஈடுபட்டார். புத் தாண்டு விடுமுறை

2A

## சீனாவுக்கு நன்றி கூறிய மஹிந்த

கொழும்பு,ஏப்.13

கொரோனா வைரஸ் தொற் றுக்கு எதிராக இலங்கை மேற்கொண்டு வரும் போராட் டத்துக்குத் தொடர்ந்தும் சீனா வழங்கி வரும் உதவிகளுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச, சீன அரசுக்கு நன்றி தெரிவித் துள்ளார்.

இலங்கைக்கு உடனடியாகத் தேவைப்படும் 20 ஆயிரம் பரிசோதனைக் கருவிகளை அன்பளிப்பாக வழங்கிய மைக்காக சீன

02

## கூட்டுறவு சங்கங்களுக்கு 2ஆம் கட்ட பொருள்கள்

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ப.நோ.கூ. சங்கங்களுக்கு இரண்டாம் கட்டமாக பொருள் கள் எடுத்து வரப்படவுள்ளதாக மாவட்டச் செயலர்

02

## சங்கிலி அறுத்தவரும் வாங்கியவரும் கைது

யாழ்ப்பாணம், ஏப். 13

ஊரடங்கு வேளையில் சங்கிலி அறுத்துக் கொண்டு தப்பியோ டியவர் எனச் சந்தேகிக்கப்படு வரும், அந்தச் சங்கிலியை வாங்கிய நகைக் கடை ஊழியர் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ள்ளனர்.

திருநெல்வேலி பல்கலைக் கழக பின்வீதியில் கடந்த

02

## மந்திகை மருத்துவமனை அத்தியட்சகருக்கு எதிர்ப்பு

### பொது அமைப்புகளும் போர்க்கொடி

யாழ்ப்பாணம், ஏப். 13

வடமராட்சி மக்களுக் கான மருத்துவ சேவை யை வழங்கிவரும் பருத் தித்துறை (மந்திகை) ஆதார மருத்துவமனை யைப் பாதுகாப்பதற்கு அனைவரும் அணிதிரள நெல்லியடி வர்த்தக சங் கம் மற்றும் மருத்துவ மனை அபிவிருத்தி சங் கம் என்பன பகிரங்க அழைப்பு விடுத்துள்ளன. நேற்று இடம்பெற்ற பத்தி ரிகையாளர் சந்திப்பி லேயே அவர்கள் இந்த அழைப்பை விடுத்து ள்ள னர்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் அபிவிருத்திச் சங்கச் செயலர் சிவசி

02


## வீட்டில் இருந்து வழிபட்டு தான, தர்மங்கள் செய்க

### இந்து சமயப் பேரவை வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 13

"புதுவருட வழிபாடுகளை வீட்டில் இருந்தபடி மேற் கொள்வதோடு, இந்த இக்கட்டில் அல்லற்படுவோர்க்கு இயன்ற தான தர்மங்களைச் செய்யுங்கள்" என்று இந்து சமயப் பேரவை கோரியுள்ளது.

02



## வானில் தென்பட்டது விண்வெளி நிலையம்

யாழ்ப்பாணம்,ஏப்.13

நாசாவின் அறிவிப்புக்கு அமைவாக சர்வதேச விண் வெளி நிலையம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.22 மணி முதல் 3 நிமிடங் கள் வானில் தென்

2A

## புத்தளத்திலிருந்து...

ள்ளனர். அவர்கள் சுயதனிமைப்படுத்தல் இன்றி நடமாடித் திரிவதால் மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

புத்தளத்திலிருந்து காட்டுப் பகுதியூடாக திருகோணமலையை அவர்கள் வந்தடைந்துள்ளனர். திருகோணமலையிலிருந்து காட்டுப் பாதை ஊடாக புல்மோட்டையைச் சென்றடைந்துள்ளனர். அங்கிருந்து படகு மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தின் கருநாட்டங்கேணிப் பகுதிக்கு வந்துள்ளனர். அங்கு தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சிங்கள மீனவர்களுடன் இவர்கள் இணைந்துள்ளனர்.

வெளிமாவட்டத்தவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வந்தமை தொடர்பில் கிராம அலுவலர், பொதுச் சுகாதார பரிசோதகர், பொலிஸாருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. 9பேரையும் சுய தனிமைப்படுத்தலில் இருக்குமாறு அதிகாரிகள் அறிவுறுத்திய போதும் அவர்கள் வெளியில் நடமாடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஊரடங்கு நேரத்தில் மாவட்டம் விட்டு மாவட்டம் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. புத்தளம் மாவட்டத்தில் கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர். ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் எவரும் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில், புத்தளத்திலிருந்து வந்தவர்களால் முல்லைத்தீவில் கொரோனா பரவும் சூழல் ஏற்பட்டுள்ளதாக மக்கள் அச்சமடைந்துள்ளனர். (ஒ.5,19,105)

## பேராபத்து...

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கையில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்படுத்தப்பட்டு நாடு முடக்கப்பட்டபடியால் இங்கு கொரோனா வைரஸ் அதி வேகத்தில் பரவுவதைத் தடுக்க முடிந்தது. இருப்பினும், ஒவ்வொரு செயலிலும் பேராபத்து இருப்பதை அனைவரும் மனதில் கொள்ள வேண்டும்.

ஏற்கனவே தொற்றுக்குள்ளாகியவர்களின் உறவுகள் மற்றும் அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் மேலும் பாதிப்படைந்து வருகின்றனர். எனவே, தொற்றுக்குள்ளாகியவர்களின் உறவுகள் மற்றும் அவர்களுடன்நெருங்கிப்பழகியவர்கள்கட்டாயம்தனிமைப்படுத்தலுக்குட்பட வேண்டும்.

இந்த அபாயகரமான கட்டத்தில் தமிழ் சிங்களப் புத்தாண்டு பிறக்கின்றது. இதன்போது மக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்க்க வேண்டும். சமூக இடைவெளி குறித்து மக்கள் கவனமாக இருக்க வேண்டும். நாட்டினதும் மக்களினதும் நலனைக் கருத்தில் கொண்டு ஒவ்வொருவரும் செயற்பட வேண்டும். என்றார். (க22)

## புத்தாண்டு..

அத்துடன் புத்தாண்டை முன்னிட்டு கிராமங்களில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கொண்டாட்டங்கள் - நிகழ்வுகளை தடுத்து நிறுத்துமாறு பதில் பொலிஸ் மா அதிபர், அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் கட்டளை வழங்கியுள்ளார். தமிழ், சிங்களப் புத்தாண்டைக் கடைப்பிடிக்கும் நிலையில் கைவிஷேசம், நாள் வேலை உள்ளிட்ட சம்பிரதாயங்களை குடும்பத்தினருடன் இணைந்து வீடுகளில் மட்டுப்படுத்துமாறு அரசு கேட்டுக்கொண்டுள்ளது. (து)

## தாவடி...

கள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். தாவடிக்கிராமத்தில் கொரோனா நோயாளி கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து அக்கிராமம் முடக்கப்பட்டிருந்தமை குறிப்பி டத்தக்கது. (ஒ.5)

## 56 பேர்...

தொற்றுக்குள்ளாகி வீடு திரும்பியோரின் எண்ணிக்கை 56 ஆக அதிகரித்துள்ளது. இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 203 பேரில் தற்போது 140 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் சந்தேகத்தில் 154 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (க-22)

## கூட்டுறவு...

கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார். யாழ்ப்பாண மாவட்டத்தில் நியாய விலையில் அத்தியாவசிய பொருள்களை விநியோகிப்பதற்காக முதல் கட்டமாக பொருள்கள் எடுத்து வரப்பட்டிருந்தன. இந்த நிலையில் இரண்டாம் கட்டமாக பொருள்கள் எடுத்து வரப்படவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பொருள் தேவைக்கான கோரிக்கை வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் ஊடாக யாழ்ப்பாண மாவட்டச் செயலரிடம் ஒப்படைக்கப்படும். மாவட்டச் செயலர் அதனை உணவுக் கட்டுப்பாட்டு ஆணையாளருக்கு அனுப்பி சதொசவிலிருந்து பொருள்களைக் கொள்வனவு செய்து மாவட்டத்துக்கு எடுத்து வரப்படும்.

இந்த வாரம் குறித்த பொருள்கள் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மாவட்டச் செயலர் குறிப்பிட்டார். (ஒ.5)

## சீனாவுக்கு...

தொழிலதிபரான ஜெக்மாவுக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பிரதமர் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

சீனா அன்பளிப்பாக வழங்கிய பரிசோதனைக் கருவிகள் நேற்று முன்தினம் மாலை விமானம் மூலம் இலங்கை வந்துள்ளது. அதேவேளை, பிரதமர் வழங்கிய ஊக்குவிப்புக்காக கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் தனது ருவிற்றர் பக்கத்தில் அவருக்கு நன்றி தெரிவித்துப் பதிவிட்டுள்ளது.

கொரோனாவுக்கு எதிராகப் போராட இலங்கை நண்பர்களுக்கு சீனா தன்னாலான உதவிகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும். கடந்த தசாப்தங்களில் தாம் இவ்வாறு செயற்பட்டுள்ளதாகவும் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. (க)

## சங்கிலி...

8ஆம் திகதி ஊரடங்கு வேளையில் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றவர்களே கோப்பாய் பொலிஸாரின் முயற்சியால் மடக்கிப்பிடிக்கப்பட்டனர்.

அந்த வீதியில் வசிக்கும் பெண் எதிர் வீட்டுக்குச் செல்வதற்காக வீதியைக் கடந்துள்ளார். வீதியால் பயணித்த இரு இளைஞர்கள் ஓர் முகவரியை கேட்பதுபோன்று பாசாங்கு செய்து, அவரது கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டு தீவிர தேடுதல் நடத்தப்பட்டபோது, சங்கிலியை அறுத்துச் சென்றவர்கள் அகப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் பிரகாரம் சங்கிலியை ஒரு நகைக் கடை ஊழியரிடம் விற்பனை செய்யப்பட்ட நிலையில் அவரும் கைது செய்யப்பட்டார். (ஒ.5,105)

## மந்திகை...

தம்பரம் மற்றும் நெல்லியடி வர்த்தக சங்கத்தின் செயலர் இ.சுரேஷ்சன் ஆகியோர் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

நெல்லியடி வர்த்தக சங்க செயலர் தெரிவித்ததாவது:

கொரோனா தடுப்புக்கு மருத்துவமனைகளில் முன்னெடுக்க வேண்டிய ஏற்பாடுகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டு ஆறு நாள்கள் தாண்டியும் எதுவுமே செய்யப்பட்டிருக்கவில்லை. அத்தியட்சகர் மருத்துவர் த.குகதாசனை தொடர்பு கொண்ட போது சில பொருள்கள் தேவையென தெரிவித்திருந்தார். இதற்கெனபத்து இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு, மருத்துவப் பொருள்கள் வாங்கும் வர்த்தக நிலையத்துக்குச் சென்ற போது இரு தினங்களுக்கு முன்னராக அவை மருத்துவமனையால் கொள்வனவு செய்யப்பட்டுவிட்டமை கண்டறியப்பட்டது.

மந்திகை மருத்துவமனையில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் தாமதமாகவே நடைபெற்றுவருகின்றன. மாரடைப்பால் பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழக்க பெருங்குழப்பம் ஏற்பட்டிருந்தது. மருத்துவர்களை ஒருங்கிணைத்து பணியாற்ற வேண்டிய அத்தியட்சகர் மருத்துவர் த.குகதாசன் குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றார். அன்று உயிரிழந்தவரின் மாதிரி மதியத்தின் பின்னரே யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டது. அந்தத் தாமதத்தால் மருத்துவமனைக்குச் சென்றிருந்த 300 வரையான நோயாளர்கள் அலைக்கழிக்கப்பட்டனர். சிகிச்சையளித்த மருத்துவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அத்தியட்சகர் மருத்துவர் த.குகதாசனை உடனடியாக இடமாற்றம் செய்து மருத்துவமனைப் பணிகளை சுமூகமடையச் செய்யுமாறு கோருவதுடன் இந்த விடயத்தில் ஜனாதிபதி மற்றும் தொடர்புடைய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்கவும் கோருவதாகவும் தெரிவித்தார்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை அபிவிருத்தி குழு செயலர் சிவசிதம்பரம் கருத்து வெளியிடுகையில்,

மருத்துவமனைக்கு கிடைக்கின்ற நிதியை நலன்புரிச் சங்கமே கையாள்கின்றது. அதற்கு என்ன நடக்கின்றதென்பதே தெரியாது. மருத்துவமனை கடந்த காலங்களில் நெருக்கடிகள் மத்தியில் சிறப்பாக செயற்பட்டது. அதிலும் போர்க் காலங்களில் குறைவான மருத்துவ வசதிகளுடன் பணிகள் திருப்திகரமாக முன்னெடுக்கப்பட்டிருந்தன.

ஆனால் அத்தியட்சகர் மருத்துவர் த.குகதாசன் நியமிக்கப்பட்டதன் பின்னராக இன்று எந்தவொரு முன்னேற்றமும் இல்லாதிருக்கின்றது. கணக்குகளில் வெளிப்படைத் தன்மை இன்மையால் எவரும் உதவத் தயாராக இல்லை.

அண்மையில் 13 பேர் சத்திர சிகிச்சைக்கு வந்த போது மின் துண்டிப்பு காரணமாக சத்திர சிகிச்சை இரத்துச் செய்யப்பட்டது. மாற்று மின்பிறப்பாக்கி கூட திருத்தப்படாதுள்ளது. கம்பரெலிய நிதியில் வைத்தியசாலை வளவில் உள்ள ஆலய நிர்மாண வேலையில் கூட மோசடி நடைபெற்று பிரதேச செயலர் தடுத்து நிறுத்தினார்.

வடமராட்சியில் ஒரு இலட்சம் வரையிலான மக்கள் சிகிச்சை பெறும் ஒரு வைத்தியசாலையாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை உள்ளது. நாம் வைத்தியசாலைக்கென வழங்கப்படும் மற்றும் கிடைக்கும் நிதிகள் தொடர்பில் வெளிப்படைத் தன்மையைக் கோருகின்றோம்.

வைத்தியசாலை அத்தியட்சகர் மருத்துவர் த.குகதாசனை இடமாற்றம் செய்து பொருத்தமான மருத்துவ அதிகாரியொருவரை நியமிப்பதன் மூலம் வைத்தியசாலையினைக் காப்பாற்ற வேண்டும் என அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இதனிடையே வைத்தியசாலை அத்தியட்சகர் மருத்துவர் த.குகதாசனை இடமாற்றம் செய்ய வலியுறுத்தி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வழங்கிய காலக்கெடு இன்றுடன் முடிவுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,20)

## கொரோனா...

இவர் அண்மையில் அம்பாறை, அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் கட்டாரிலிருந்து வந்திருந்த - கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருந்ததாக அடையாளம் காணப்பட்டவரின் மனைவியாவார்.

ஏற்கனவே கொரனா தொற்றுள்ளதாக அடையாளம் காணப்பட்டவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களில் சுய தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டிருந்தவர்களில் 10 பேர் பரிசோதனைக்காக பொலனறுவை தம்மின்ன கொரோனாத் தடுப்பு பரிசோதனை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் 8 பேரின் பரிசோதனை முடிவுகள் நேற்று வந்துள்ளன. இதில் முதலாவதாகப் பாதிக்கப்பட்டவரின் மனைவிக்குத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து அக்கரைப்பற்றில் சுய தனிமைப்படுத்தப்பட்டிருந்த மேலும் 51 பேர் கொரோனா பரிசோதனைக்காக பொலனறுவை தம்மின்ன கொரோனா தடுப்புப் பரிசோதனை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கு.சுகுணன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் இதுவரை கொரோனாத் தொற்றுக்குள்ளாகியவர்களின் எண்ணிக்கை இரண்டாக அதிகரித்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-22)

## வீட்டில்...

இன்று பிறக்கும் புதுவருடத்தையொட்டி யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் அதன் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் தெரிவித்துள்ளதாவது:

இந்த இக்கட்டான சூழலில் பல்லாயிரக்கணக்கானோரை உலகம் இழந்து விட்டது, பல லட்சம் மக்கள் இந்தக் கொடிய நோயால் அவதியுறுகின்றார்கள். முழு உலகையே வீட்டுக்குள் முடக்கிவிட்டுள்ள இந்நோய். கோடிக்கணக்கான மக்கள் வாழவழியின்றி ஒருநேர உணவுக்குத் தவிக்கின்றார்கள். நோயாளரை உறவினர் பராமரிக்க முடியாதநிலை. இறந்தவரைச் சுற்றத்தார் தகனம் செய்யமுடியாது. இப்படி ஓர் சூழலை நாம் என்றும் கண்டதில்லை. இந்த உலகப்பேரவலத்தில் இருந்துவிடுபடுவதற்கு அரச அறிவுறுத்தல்களையும், மருத்துவர்களின் ஆலோசனைகளையும் பின்பற்றுவதோடு இறைவழிபாடே எமக்கு வழிகாட்டும் என்பது தெளிவு.

வரலாற்றில் வீட்டுக்குள் இருந்தபடி புத்தாண்டை வரவேற்கவேண்டிய இக்கட்டினுள் இருக்கின்றோம். இந்தச் சூழலையும் மகிழ்வாக எதிர்கொண்டு புதுவருட வழிபாடுகளை வீட்டில் இருந்தபடி மேற்கொள்வதோடு, இந்த இக்கட்டில் அல்லற்படுவோர்க்கு இயன்ற தான தர்மங்களைச் செய்யுங்கள்.

அனைவர்க்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை சிறி சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானைத் தியானித்துத் தெரிவித்துக்கொள்கிறோம். என்றுள்ளது. (து)

# தேர்தலை நடத்துவது பற்றி அரசு தீர்மானிக்க முடியாது

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 13
பொதுத் தேர்தலை நடத்துவதா பிற்போடுவதா என்பதை அரசு தீர்மானிக்க முடியாது. தேர்தல் குறித்த தீர்மானங்களை தேர்தல்கள் ஆணைக்குழுவே முன்னெடுக்கும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.
அவர் மேலும் கூறியதாவது,
தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை. நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் மூன்று மாதங்களில் புதிய நாடாளுமன்றம் கூட்டப்படும் என்ற நம்பிக்கையில் தான் நாமும் செயற்பட்டோம். ஆனால் கொரோனா வைரஸ் பரவல் முழு உலகையும் உலுக்கியுள்ள நிலையில் எமது நாட்டின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு எம்மால் இப்போது எந்தவித தேர்தல் நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.
எனினும் விரைவில் தேர்தல் நடத்தப்படும். ஜனாதிபதியும் அரசும் தேர்தலை நடத்துவது குறித்து எந்த மாற்றுக் கருத்துக்களையும் கொள்ளவில்லை. தேர்தலை நடத்துவதா அல்லது நிலைமைகளை அவதானித்து தேர்தலை மேலும் சிலகாலம் பிற்போடுவதா என்பது குறித்து அரசு எந்தவிதத் தீர்மானமும் எடுக்க முடியாது. இது குறித்து தீர்மானம் எடுக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கே உள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் இது குறித்து தீர்மானம் எடுக்க வேண்டும். ஏற்கனவே தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதியிடம் முன்வைத்த கோரிக்கைக்கு ஜனாதிபதி பதில் தெரிவித்துள்ளார்.
தேர்தலை நடத்துவது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானம் எடுக்க வேண்டும் என்ற தெளிவான பதில் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கையில் விரைவில் தேர்தல் திகதி யொன்று அறிவிக்கப்பட வேண்டும். இந்த இடைப்பட்ட காலத்தில் நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. ஆனால் நாடாளுமன்றத்தைக் கூட்டும் எந்த எண்ணப்பாடும் அரசிடம் இல்லை. இப்போதுள்ள பிரச்சினைகளில் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதில் எந்த அர்த்தமும் இல்லை. என்றார். (த)

# முடிவு எட்டப்படாவிடில் பணிப்புறக்கணிப்பு!

## பரு. வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 13
பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகரை இடமாற்றம் செய்வது தொடர்பாக, எவ்விதமான சாதகமான பதில்களும் எட்டப்படவில்லை அதனால் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.
இதுதொடர்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரனுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் பதில் கிடைக்கவில்லை. கொரோனா நோய்த் தொற்றில் இருந்து மக்களுடையதும், வைத்தியர்களதும், ஏனைய சுகாதார உத்தியோகத்தர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எமது நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற எதுவிதமான சாதகமான பதிலும் மாகாண சுகாதார அமைச்சிலிருந்து கிடைக்கப்பெறவில்லை.
இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகளின் பொதுக் குழுக்கூட்டத்தில் அடையாள பணிப்புறக்கணிப்பா அல்லது முழுநேரப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதா என்பது தொடர்பான தீர்க்கமான முடிவு எட்டப்படும்.
பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகரை உடனடியாக இடமாற்றம் செய்யும் கோரிக்கையை முன்வைத்து நாளை செவ்வாய்க்கிழமை 8 மணி தொடக்கம் பணிபுறக்கணிப்பில் ஈடுபடவுள்ளோம். என்றுள்ளது. (க7)

# வட்டக்காய் கொள்வனவு

கொழும்பு, ஏப்.13
அநுராதபுரம் மற்றும் மஹவிலச்சிய பகுதியில் பயிரிடப்பட்டுள்ள வட்டக்காய் செய்கையிலிருந்து கிடைத்துள்ள பெரும் விளைச்சலைக் கொள்வனவு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அரசு அநுராதபுரம் மாவட்ட செயலாளருக்கு அறிவித்துள்ளது. ஜனாதிபதியின் ஊடகப் பிரிவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வட்டக்காய் கொள்வனவு செய்வதற்கு தேவையான நிதியை மாவட்ட செயலாளருக்கு வழங்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.
கொள்வனவு செய்யப்படும் வட்டக்காய்களை அநுராதபுர மாவட்ட செயலாளரின் உதவியுடன் கொழும்புக்கு கொண்டுவந்து மாவட்டத்தின் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்குமாறு கொழும்பு மாவட்ட செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## தேர்தல் கால இடமாற்றம்

# ஆணைக் குழுவுக்கு முறைப்படி விண்ணப்பித்தால் பரிசீலிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 13
தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இடமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்படி விண்ணப்பித்து, ஆணைக்குழு அதனைப் பரிசீலித்து முடிவு அறிவிக்கும். அதன் பின்னர் இடமாற்றங்களை நடைமுறைப்படுத்த முடியும். இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.
யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றிய ஏ.தேவநேசனுக்கு சுகாதார அமைச்சு இடமாற்றம் வழங்கியிருந்தது. கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளில் ஒத்துழைக்கவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.
இந்த விடயம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. தேர்தல் காலத்தில் இடமாற்றங்கள் மேற்கொள்ள முடியாது என்று குறிப்பிட்டுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு இடமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்படி விண்ணப்பித்து ஆணைக்குழு அதனைப் பரிசீலித்து முடிவு அறிவித்த பின்னர் மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளது. (ஒ,5,105)

# பாதிப்பு 1,850,000 இறப்பு 113,000!

வுகான், ஏப். 13
கொரோனா வைரஸால் உலக அளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 18 லட்சத்து 50 ஆயிரமாக அதிகரித்தது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 113,000ஆக அதிகரித்தது.
கொரோனா வைரஸ் காரணமாக தினமும் பல்லாயிரம் மக்கள் மடிந்து கொண்டிருக்கின்றனர். அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் இறப்புக்கள் தொடர்கதையாகி வருகின்றன. நேற்றுமுன்தினம் மட்டும் உலக அளவில் 6 ஆயிரத்து 95 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் நேற்று நள்ளிரவு 12 மணி வரையான நிலவரத்தின்படி உலக அளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 18 லட்சத்து 50 ஆயிரமாக அதிகரித்தது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 113,000ஆக அதிகரித்தது. (ம)

# சுகாதார ஊழியர்கள் 27 பேர் தனிமைப்படுத்தல்

கொழும்பு,ஏப்.13
ராகம, வெலிசற மருத்துவமனைகளின் 27 சுகாதார ஊழியர்கள் தனிமைப்படுத்தல் மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.
ஜாஎல சுதுவெல்லை பகுதியில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளியுடன் தொடர்பை பேணிய ராகம - வட கொழும்பு போதனா மருத்துவமனையின் ஊழியர் ஒருவருக்கு கொரோனாத்தொற்று ஏற்பட்டுள்ளது.
இதன் காரணமாக, அந்த மருத்துவமனையின் 22 ஊழியர்களும், வெலிசற மருத்துவமனையின் 5 ஊழியர்களும் நேற்றுத் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.
ஜா எல - சுதவெல்லைப் பகுதியில் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்த 28 பேர், தனிமைப்படுத்தலை புறக்கணித்தமையால் கடந்த 9 ஆம் திகதி கடற்படையினர் அவர்களைத் தங்களின் பொறுப்பில் எடுத்து, தனிமைப்படுத்தலுக்கு அனுப்பி வைத்தனர்.
இந்த நிலையில், அவர்களில் 6 பேர் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் எனப் பின்னர் கண்டறியப்பட்டது. அவர்களுடன் தொடர்பிலிருந்த ராகம போதனா மருத்துவமனையின் ஊழியர் ஒருவருக்கும் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## இராணுவ...

மற்றும் கொரோனாத் தொற்றுக் காரணமாக படையினர் நீண்ட காலமாக வீடுகளுக்கு விடுமுறையில் செல்லாது அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றமையைப் பாராட்டும் வகையிலும், அவர்களின் பணிகளை ஊக்குவிக்கும் வகையிலும் பயணம் மேற்கொண்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. பின்னர் அவர் வடக்கிலுள்ள இராணுவ முகாம்கள் பலவற்றுக்கும் நேற்றுச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-6,35

## வானில்...

பட்டது.
இலங்கையர்கள் வெற்றுக்கண்களால் விண்வெளி நிலையத்தை பார்க்கக் கூடிய அரிய சந்தர்ப்பம் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், பலர் குறிக்கப்பட்ட நேரத்தில் வானத்தை அவதானித்துள்ளனர். சமூக வலைத்தளங்களிலும் அது தொடர்பான புகைப்படங்கள் பகிரப்பட்டுள்ளன. (க)

# அரசின் நிர்ணய விலையில் அரிசி விற்பனைக்கு இணக்கம்

## ஆட்டக்காரிக்கு இன்று விலை நிர்ணயம்

*யாழ்ப்பாணம், ஏப். 13*

அரசு அறிவித்த நிர்ணய விலைக்கு அரிசி விற்பனை செய்வதற்கு யாழ்ப்பாண மாவட்ட மொத்த வியாபாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர். அதேவேளை, அரிசி ஆலை உரிமையாளர்கள், வர்த்தக சங்கத்தினர், மாவட்டச் செயலருடன் இன்று காலை இடம்பெறும் கலந்துரையாடலில் ஆட்டக்காரி, மொட்டக் கறுப்பன் அரிசிக்கும் விலை நிர்ணயம் செய்யப்படவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட வர்த்தக சங்கத்தினர், மொத்த வியாபாரிகள் ஆகியோருக்கும் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசனுக்கும் இடையிலான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

'அரசு அறிவித்த நிர்ணய விலைக்கு அமைவாக தங்கள் கையிருப்பில் உள்ள அரிசியை விற்பனை செய்வதற்கு வர்த்தகர்கள் இணங்கியுள்ளனர். தமது வர்த்தக நிலையங்களில் ஏனைய பொருள்களின் விலைகளையும் காட்சிப்படுத்துவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர்' என்று மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

வர்த்தக சங்க உபதலைவர் இ.ஜெயசேகரன், எமது வர்த்தகர்கள் அரசு தற்போது அறிவித்த நிர்ணய விலையில் அரிசி விற்பனை செய்வார்கள். ஆனாலும் அவர்கள் அரசு அறிவித்த விலையை விட அதிக விலை கொடுத்தே அரிசியைக் கொள்வனவு செய்துள்ளார்கள். கையிருப்பில் உள்ள அரிசியை, ஒருவருக்கு இரண்டு கிலோ வீதம் விற்பனை செய்வார்கள்' என்றார்.

இதேவேளை, அரசு விலை நிர்ணயம் செய்யாத ஆனால் யாழ்ப்பாணத்தில் அதிகம் விற்பனையாகும் ஆட்டக்காரி மற்றும் மொட்டக்கறுப்பன் அரிசி வகைகள் தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது. அவற்றின் விலைகள் தற்போது அதிகமாக உள்ளதாக மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கு விலை நிர்ணயம் செய்வதற்கு, இன்று காலை கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. இன்று காலை 9.30 மணி தொடக்கம் 10.30 மணி வரை வர்த்தக சங்கத்தினருக்கும், அரிசி ஆலை உரிமையாளர்களும் இடையில் கலந்துரையாடல் நடைபெறும். அதன் பின்னர் 10.30 மணிக்கு மாவட்டச் செயலருடன் கலந்துரையாடல் நடைபெறும். இதன் பின்னர் அவற்றுக்குரிய நிர்ணய விலை அறிவிக்கப்படும். (ஒ,5)



# உயிர்த்த ஞாயிறு 2020

**நிலாந்தன்**

*உயிர்த்தெழுந்த போது*
*கிறிஸ்து*
*முரட்டுத்துணியாலான மாஸ்க் அணிந்திருந்தார்*
*தோமஸ்*
*திருக்காயங்களைச் சோதிக்கமுன்னும் பின்னும்*
*கைகளைத் தொற்று நீக்கியால் கழுவினான்*

*பூமியின் பாரம் குறையலானது*
*நாடு*
*முதியவர்களை*
*நாய்களைப் போல சாக விட்டது*
*சைரனும் சேமக்காலை மணியும்*
*ஒலிக்காத பொழுதுகளில்*
*இத்தாலியர்கள்*
*ஆளரவமற்ற தெருக்களை*
*இசையால் நிரப்பினார்கள்*

*கள்ளத் தீர்க்கதரிசிகள்*
*ஒழியொழித்த காலமொன்றில்*
*மருத்துவர்களே*
*சமூகத்தின் பேச்சாளர்களாக மாறினார்கள்*

*காற்றைப் பட்டங்கள் கைப்பற்றின*
*கடலை மீனினங்கள் கைப்பற்றின*
*வானத்தைப் பறவைகள் கைப்பற்றின*
*ஜலந்தரின்*
*மாசற்ற வானில்*
*இமயமலை*
*ஒரு நிலக்காட்சி ஓவியம் போல படர்ந்து கிடந்தது*

*கிறிஸ்து*
*மாஸ்க் இல்லாமல்*
*உயிர்த்தெழும் காலமொன்றுக்காக*
*பூத்திருக்கிறது கொன்றை*

யாழ்ப்பாணம்
12.04.2020



# பொலிஸார் இனி கடும் போக்கு!

கொழும்பு, ஏப். 13

பொலிஸார் கடுமையாகச் செயற்பட ஆரம்பித்துள்ள போதிலும் இன்னும் இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் பொலிஸார் செயற்படுவது போல், கடுமையான வழிமுறைகளைப் பின்பற்றும் நிலைக்குச் செல்லவில்லை என்று பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி அஜித் ரோஹண தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய சூழ்நிலையில் சற்று கடுமையாகச் செயற்பட வேண்டியுள்ளது. நாட்டினதும், நாட்டு மக்களினதும் எதிர்காலத்தை கருதியும், தனிமைப்படுத்தல் சட்டதிட்டங்களை உரிய வகையில் நடைமுறைப்படுத்துவதற்காகவுமே தீவிரமாக செயற்படுகின்றோம்.

'கடுமையான போக்கு' என்பது தற்போதைய சூழ்நிலையில் மக்களுக்காகவே, அதில் வேறு எந்தநோக்கமும் இல்லை.

அதேவேளை ஏப்ரல் 11 ஆம் திகதி காலை 6 மணி முதல் 12 ஆம் திகதி காலை 6 மணிவரையான 24 மணிநேரத்தில் ஊரடங்கு சட்டத்தை மீறிய ஆயிரத்து 555 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சுமார் 350 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்ட நாளில் இருந்து 12 ஆம் திகதி காலை 6 மணிவரை 23 ஆயிரத்து 500 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர். மாவட்டங்களுக்கிடையில் பயணம் செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த நடைமுறையை இன்னும் எவரும் மீறவில்லை என்றார். (ஒ,5,44)

# வாய்க்காலில் ஆணின் சடலம்

கிளிநொச்சி, ஏப். 13

கிளிநொச்சி முக்கொம்பன் பகுதி நீர்ப்பாசன வாய்க்காலில் நேற்று ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்ணகைபுரம் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய மார்க்கண்டு ஜெகதீஸ்வரன் (வயது 42) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர். இவர் ஒரு பிள்ளையின் தந்தை. சம்பவம் கொலையா தற்கொலையா என்பது தெரியவில்லை. (த-214,222)

# கைதடியில் சனசமூக நிலையம் எரிப்பு

சாவகச்சேரி, ஏப். 13

சனசமூக நிலைய அறை உடைக்கப்பட்டு, அங்கிருந்த பொருள்கள் தீயிட்டு எரிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இரவு கைதடியில் இடம்பெற்றுள்ளது

கைதடி கிழக்கில் உள்ள விநாயகர் சனசமூக நிலையமே இவ்வாறு தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது. பெருமளவான சொத்துக்கள் எரிந்து நாசமாகியுள்ளது. சனசமூக நிலைத்துக்கு தீயிட்டவர்கள் யார் என்பது இதுவரை கண்டறியப்படவில்லை என்று சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர். அது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவாகவும் அவர்கள் தெரிவித்தனர். இரு அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களிடையே இடம்பெற்ற கருத்து வேறுபாட்டால் சனசமூக நிலையம் எரிக்கப்பட்டிருக்கலாமென அந்தப் பகுதி மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ப)

# இரண்டாம், மூன்றாம் தரப்பினரையும் சோதனைக்கு உட்படுத்த வேண்டும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 13

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளியுடன் நெருங்கிப் பழகிய முதல் தரப்பினர்களை மட்டுமில்லாமல் இரண்டாவது மற்றும் மூன்றாவது தரப்புக்களையும் பரிசோதனை செய்ய வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தக் கட்டத்தில் மிக முக்கியமான விடயம் என்னவென்றால், இலங்கையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள நபர்களின் சரியான எண்ணிக்கையை கண்டுபிடிப்பதுதான். தற்போது, அறிகுறிகளைக் காண்பிக்கும் நபர்கள் மட்டுமே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பரிசோதிக்கப்படுகிறார்கள். அதையும் தாண்டி, அவர்களின் முதல் தொடர்புகள் சோதிக்கப்படுகின்றன. ஆனால் இரண்டாவது மற்றும் மூன்றாவது தொடர்புகளுக்கும் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம், என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவி செயலர் நவீன் டி சொய்சா ஆங்கில ஊடகத்துக்கு தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 நோயாளிகளின் முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது தொடர்புள்ளவர்களின் விவரங்களை, தனிமைப்படுத்தப்பட்ட மையங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களிடம் இருந்து சேகரிக்க முடிந்தது என்று இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

அதில் 47 ஆயிரத்துக்கும் அதிகமான நபர்கள் உள்ளனர். அவர்களில் 2 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரம் பேர் முதல் தொடர்புடையவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சுகாதார அதிகாரிகள் குறைந்தபட்சம் முதல் தொடர்புகளைச் சோதித்து, அவர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களா இல்லையா என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். இது முடிந்ததும், மக்கள் எங்கு இருக்கிறார்கள், அறிகுறியற்ற நோயாளிகள் இருக்கிறார்களா?, மேலும் எத்தனை பேர் பாதிக்கப்படக்கூடும் என்பதையும் நாங்கள் அறிந்துகொள்ள முடியும்' என நவீன் டி சொய்சா குறிப்பிட்டுள்ளார்.

தனிமைப்படுத்தப்பட்ட காலத்தை நிறைவு செய்தவர்கள் வீடு திரும்பிய பின்னர் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்ட சம்பவங்களும் உள்ளன என சுட்டிக்காட்டிய அவர் எனவே, சமுதாயத்தில் 100 அறிகுறியற்ற நோயாளிகள் இருந்திருந்தால், அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு மீண்டும் சமூகத்தில் ஒருங்கிணைந்தாலும் கூட, அது இன்னும் பாரிய பிரச்சினைக்கு வழிவகுக்கும் என்று எச்சரித்தார்.

'தனிமைப்படுத்தப்பட்ட மக்கள் உண்மையில் ஆரோக்கியமாக இருப்பதை உறுதி செய்வதற்காக, அவர்களும் தனிமைப்படுத்தப்பட்ட மையத்தில் பி.சி.ஆர் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும், மேலும் 14 நாள்களுக்குப் பின்னர் அவர்கள் வீட்டிற்குச் சென்றபின்பும் மேலும் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்' எனக் கூறினார். (ஒ,5)

# சமுர்த்திக் கடன் மானியமாக மாற்றம்

யாழ்ப்பாணம், ஏப்.13

சமுர்த்தித் திட்டத்தின் கீழ் சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட 5ஆயிரம் ரூபா கொடுப்பனவை மானியமாக மாற்றம் செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளதாக சமுர்த்திப் பணிப்பாளர் நாயகம் ஆர்.பி.பீ. திலக்கசிரி அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவித்தல் 10.04.2020 திகதிய சுற்றறிக்கை மூலம் சகல மாவட்டச் செயலாளர்கள், சமுர்த்திப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள் ,சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் உள்ளிட்ட சம்மந்தப்பட்ட அனைவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. சஹன பியவர, அருணலு ஆகிய திட்டங்கள் மூலம் சமுர்த்திப் பயனாளிகளுக்கு கடனாக வழங்கப்பட்ட 5ஆயிரம் ரூபாவையும், காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட 5ஆயிரம் ரூபா கொடுப்பனவையும் மானியமாக மாற்றுமாறு தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப-214)



# ரயில் தொகுதிகள் கொழும்பு வந்தன

கொழும்பு, ஏப். 13

இலங்கை புகையிரத திணைக்களத்தினால் சீனாவிடம் கொள்வனவு செய்யப்பட்ட எஸ்.14 ரயில் தொகுதிகள் கொழும்பு துறைமுகத்தை நேற்று வந்தடைந்தன.

இந்த ரயில் தொகுதிகள் சீன கப்பல் மூலம் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. அவற்றைக் கப்பலிலிருந்து இறக்கும் பணிகள் நேற்று இடம்பெற்றன. 3ஆம் கட்டமாக இந்த ரயில் தொகுதிகள் கொண்டுவரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ரயில் மலையகத்துக்கான சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-114)

# நால்வர் கைது

கொடிகாமம், ஏப்.13

கைதடி தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள , முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அலுவலகத்தின் பெயர்ப்பலகையைத் திருடினர் என்ற குற்றச்சாட்டில் கைதடி தென்கிழக்குப் பிரதேசத்தை சேர்ந்த நால்வர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

நால்வரும் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் இன்று முற்படுத்தப்படுவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.(க-159)

# வாழைப்பழ உற்பத்தியாளர் ஊரடங்கால் பெரும் பாதிப்பு



யாழ்பாணம், ஏப். 13

கொரோனா அச்சம் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு கிலோ வாழைப்பழம் 10 ரூபாவுக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வாழைக்குலை உற்பத்தியாளர் சங்கத்தினர் கவலை தெரிவித்துள்ளனர்.



வாழைக்குலை உற்பத்தியாளர் சங்கத்தில் சுமார் 422 அங்கத்தவர்கள் உள்ளனர். முன்னைய நாள்களில் 15 ஆயிரம் தொடக்கம் 25 ஆயிரம் கிலோகிராம் வாழைக் குலைகள் விற்பனை நடைபெறும். ஒரு கிலோ வாழைப்பழம் கூட 50 ரூபாவுக்கு மேல் விற்பனை ஆகும். இது தவிர வெளிமாவட்டங்களுக்கு வாழைக்குலை ஏற்றுமதி செய்யப்படும். வெளி மாவட்டத்திலிருந்தும் இங்கு வந்து வாழைக்குலை ஏற்றி செல்வார்கள்.

ஆனால் நாட்டில் கொரோனாத் தாக்கம் காரணமாக வாழைக்குலை விற்பனை ஏற்றுமதி வெகுவாகக் குறைந்துள்ளது. உள்ளூரில்கூட குலைகளை விற்க முடியாது. கூட்டம் சேர முடியாது.

இந்த நிலையில், தோட்டத்தில் விளைந்த வாழைக்குலைகளை அப்படியே விட முடியாது. ஆகவே உள்ளூரில் 10 ரூபா தொடக்கம் 15 ரூபா வரை ஒரு கிலோகிராம் வாழைப் பழம் விற்பனை செய்யப்படுகின்றது. அவற்றைக்கூட முழுமையாக விற்பனை செய்ய முடியாது. இதனால் வாழைக் குலைகள் அழுகிவிடுகின்றன. அதனால் கால்நடைகளுக்கு அவற்றைப் போடும் நிலை ஏற்பட்டுள்ளது.

சில வியாபாரிகள் இங்குவந்து வாழைக்குலை கொள்வனவு செய்தாலும் அவர்கள் அதை கூடிய விலையில் வெளியே விற்பனை செய்கிறார்கள். ஆனால் இங்கு ஒரு குலை 100 ரூபா முதல் 150 ரூபாவுக்கு கொள்வனவு செய்கிறார்கள். இதனால் உள்ளூர் வாழைக்குலை உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது. (த-7)

# கசிப்பு உற்பத்தியை தடுத்த இளைஞர்கள்

கிளிநொச்சி,ஏப்.13

கிளிநொச்சி மாவட்டத்தின் திருவையாறு மற்றும் கனகாம்பிகைக்குளம் பகுதியில் உள்ள வாய்க்காலில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களை, கிராம இளைஞர்கள் இணைந்து முற்றுகையிட்டனர்.

வெள்ளவாய்க்கால்ப் பகுதியில் 5 பரல்களில் கசிப்புக் காய்ச்சிய சமயம், கிராமத்தைச் சேர்ந்த 10 இளைஞர்கள் அந்தப் பகுதியை முற்றுகையிட்டனர். இதன்போது கசிப்பு உற்பத்தியை மேற்கொண்டோர் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

இதன்பின்னர் கசிப்பு உற்பத்தி மேற்கொண்ட பரல்கள் , அடுப்புக்கள் என்பவற்றை இளைஞர்கள் கொத்திச் சேதப்படுத்தியதோடு பரல்களில் இருந்த கசிப்பும் நிலத்தில் ஊற்றி அழிக்கப்பட்டது.

ஊரடங்கு வேளையிலும் இவ்வாறு இடம்பெற்ற சட்ட விரோதச் செயற்பாட்டை இளைஞர்கள் இணைந்து தடுத்து நிறுத்தியதை அவ்வூர் மக்கள் பாராட்டியுள்ளனர். (க-105)



# தனிமைப்படுத்தலுக்கு வடக்கில் தனித் தீவு!

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 13

"கொரோனா வைரஸ் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் எவராவது சட்டவிரோதமாக ஊடுருவினால் அவர்களைத் தடுத்து வைப்பதற்கும், தனிமைப்படுத்தல் நடவடிக்கையை முன்னெடுப்பதற்கும் வடக்கில் தீவொன்று உள்ளது" என்று கொரோனா தடுப்பு தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரான இராணுவத் தளபதி லெப்டினென்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் இந்தியாவிலும் வேகமாக பரவிவருகின்றது. அங்கிருந்து கடல்மார்க்கமாக யாராவது இலங்கைக்குள் ஊடுருவினால் அவர்களை தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்கு உட்படுத்துவதற்கு தனித்தீவொன்று தயார் நிலையில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

அவ்வாறான ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளனவா என்று எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் பாலதீவு என்று தீவொன்று உள்ளது.

அந்தத் தீவில் எந்தவொரு நபரும் தற்போது இல்லை. அவ்வாறு யாராவது வந்தால் அங்கு தடுத்து வைக்க முடியுமா என்ற கருத்தாடல் உருவானது. கடற்படையிடம் தான் இது பற்றி கூறப்பட்டது.

தேவையேற்படும் பட்சத்தில் தனிமைப்படுத்தல் நடவடிக்கையை முன்னெடுப்பதற்கோ அல்லது எவரையாவது தடுத்துவைப்பதற்கோ இவ்வாறு தீவொன்று எம்வசம் உள்ளது -என்றார். (ஒ.5,44)

# உழவியந்திரம் கவிழ்ந்து இளைஞன் பரிதாபச் சாவு



முல்லைத்தீவு, ஏப். 13

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் உழவு இயந்திரம் கவிழ்ந்ததில், அதைச் செலுத்திச் சென்ற இளைஞர் அதில் நசியுண்டு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதில், முள்ளிவாய்க்கால் கிழக்கு முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த நந்தகுமார் கிருபாகரன் (வயது 26) என்பவரே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. எனினும், ஊரடங்கு நடைமுறையில் உள்ளபோது விவசாய நடவடிக்கையில் ஈடுபடலாம் என்று பின்னர் அரசு அறிவித்திருந்தது. அதனையடுத்து பலரும் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்றனர்.

அவ்வாறே முள்ளிவாய்க்கால் பகுதியில் தனது உழவு இயந்திரத்தைக் கொண்டு விவசாய நடவடிக்கைக்குச் சென்ற போது வீதியில் உழவு இயந்திரம் தடம் புரண்டதால் அதில் சிக்கி அதன் சாரதி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சடலம் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். (த-19)

# பல்கலைக்கழகங்கள் மே மாதம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 13

மே மாதம் 4ஆம் திகதி பல்கலைக்கழக நிர்வாகத்தினர் அழைக்கப்பட்டு, மே மாதம் 11ஆம் திகதி இறுதியாண்டு மாணவர்களுக்கும் 18ஆம் திகதி ஏனைய மாணவர்களுக்குமான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஒ,5)

# ஜனாதிபதியின் செயலாளருடன் தேர்தல்கள் ஆணைக்குழு சந்திப்பு

கொழும்பு, ஏப். 13

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக ஜனாதிபதியின் செயலர் பீ.பி.ஜயசுந்தர அனுப்பிய கடிதம் குறித்து விவாதிக்க தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்வரும் புதன்கிழமை அவரைச் சந்தித்து கலந்துரையாட முடிவு செய்துள்ளது.

'கடந்த வாரம் ஜனாதிபதியின் செயலர் அனுப்பிய கடிதம் கிடைத்தவுடன், கடிதத்தில் எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பாக விவாதிக்கவும், ஜனாதிபதிக்கு பதில் அனுப்பவும் ஏப்ரல் 15 சந்திக்க திட்டமிட்டுளோம்' என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

"ஒரு சுயாதீன ஆணைக்குழுவாக நாங்கள் இந்த விடயத்தைப் பற்றி விவாதித்து ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளோம். என்னால் தற்போது எமக்கு எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்த கருத்தை கூற முடியாது. இந்த விடயத்தை ஆணைக்குழு முழுமையாக விவாதித்த பின்னர் சரியான பதில் அனுப்பப்படும்" என்று கூறினார்.

இதேவேளை, ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்ட பின்னர் தேர்தலை நடத்துவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்கவிடம் ஆங்கில ஊடகம் ஒன்று வினவியிருந்தது.

இதற்குப் பதிலளித்த அவர், தேர்தலுக்குத் தயாராவதற்கு தேர்தல்கள் செயலகத்துக்கு குறைந்தது ஐந்து வாரங்கள் தேவைப்படும். ஏனெனில் தற்போது வரை வேட்புமனு தாக்கல் செயற்பாடுகளே நிறைவு பெற்றுள்ளன. தபால் மூலமான வாக்கெடுப்பை நடத்துவதற்கு தேவையான ஆவணங்களை கூட தேர்தல்கள் செயலகம் பூர்த்தி செய்யவில்லை. மிக முக்கியமாக, அரசியல் கட்சிகள் தங்கள் பரப்பரை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நேரம் வழங்க வேண்டும்' என்று குறிப்பிட்டிருந்தார். (ஒ,5)

# கட்டம் கட்டமாக பொதுத்தேர்தல்; போர்க் கொடி தூக்கும் ஜே.வி.பி.!

கொழும்பு, ஏப். 13

பொதுத் தேர்தலை கட்டம் கட்டமாக நடத்துவதென்பது மோசடிகளுக்கே வழிவகுக்கும். அவ்வாறு அசிங்கமான அரசியலை முன்னெடுத்தாவது ஆட்சியை தக்கவைத்துக் கொள்வதற்கு அரசு முயற்சிக்கின்றது. பொதுத் தேர்தல் என்பது தேசிய மட்டத்தில் ஒரே நாளில் இடம்பெறவேண்டும். இதுவே ஜே.வி.பியின் நிலைப்பாடாகும்.

இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தாக்கம், பொதுத் தேர்தலை நடத்துவதில் அரசமைப்பு ரீதியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி உட்பட சமகால நிலைவரங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது.

நாட்டில் அச்சுறுத்தலான சூழ்நிலை உருவாகியிருக்கும் வேளையில்கூட மக்கள் தொடர்பில் சிந்திக்காமல் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளும் வகையிலான அரசியல் நிகழ்ச்சி நிரலையே அரசு முன்னெடுத்து வருகின்றது. எது நடந்தாலும் பரவாயில்லை, தேர்தல் நடைபெறவேண்டும் என்பதே ஆளுங் கட்சியினரின் நோக்கமாக இருக்கின்றது.

ஆனால் வைரஸ் அச்சுறுத்தல் இல்லை என்பது விஞ்ஞானப்பூர்வமாக உறுதிப்படுத்தப்படும்வரை சுதந்திரமானதொரு தேர்தலை நடத்தமுடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

அதேபோல் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், தொற்றுநோய் தொடர்பான விசேட நிபுணர்கள், உலக சுகாதார அமைப்பு ஆகியன விஞ்ஞானப்பூர்வமான பரிந்துரைகளை முன்வைத்த பின்னரே மக்கள் தமது சாதாரண வாழ்வுக்கு திருப்ப வேண்டும்.

அதேவேளை, பொதுத் தேர்தலை நடத்தி ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தை கூட்டமுடியாதெனில் நிச்சயம் அரசமைப்பு நெருக்கடி ஏற்படும்.

எனவே, அரசமைப்பு நெருக்கடிக்கு வழிவகுக்காமல் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்கின்றோம். அதற்கான அதிகாரமும் ஜனாதிபதிக்கு இருக்கின்றது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

சட்டவாக்க சபையான நாடாளுமன்றத்தை இயக்குவதற்கான உறுப்பினர்களை தெரிவுசெய்யும் பொதுத் தேர்தல் என்பது தேசிய மட்டத்தில் இடம்பெறுவதே சிறப்பு. வலயமட்டத்தில் தேர்தல் நடத்துவது என்பது எதிர்மறையான விளைவுகளுக்கு வழிவகுக்கக்கூடும்.

உதாரணமாக கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் இல்லாத பிரதேசமாக கருதப்படும் வடமத்திய மாகாணத்தில் பொதுத்தேர்தல் நடத்தப்படுமானால் அம்மாகாணத்தில் வாக்காளர்களாக இருப்பவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இருக்கவேண்டும்.

வடமத்திய மாகாணத்தை சேர்ந்த பலர் மேல்மாகாணத்தில் தொழில் புரிகின்றனர்.

எனவே, அங்கு தேர்தலை நடைபெறுமானால் இங்குள்ள வாக்காளர்களும் அங்கு செல்லவேண்டும். ஆனால், மேல்மாகாணம் என்பது அபாய வலயம். அப்படியானால் இது எப்படி சாத்தியம்? எனவே, குறுக்கு வழியிலாவது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளவே அரசு இப்படி முயற்சிக்கிறது - என்றார். (ஒ.5,44)

# 3.7 லட்சம் இலங்கையர்களை கொன்ற வைரஸ்

## 100 வருடங்களுக்கு முன் நிகழ்ந்த பேரவலம்

எம்.ஐ.முபாறக்

கொரோனா வைரஸால் இன்று முழு உலகமும் ஸ்தம்பித்துப் போயுள்ளது. மரணம் ஒரு லட்சத்தைத் தாண்டி விட்டது. தொற்று 15 லட்சத்தைத் தாண்டிவிட்டது. இது இத்தோடு முடிந்துவிடுமா அல்லது இன்னும் தொடருமா என்று தெரியாமல் உலகம் இன்று திகைத்துப் போய் நிற்கிறது.

வரலாறுகளை புரட்டிப் பார்த்தால் இவ்வாறான வைரஸ்களால் ஏற்பட்ட அனர்த்தங்கள் உலகுக்குப் புதிதல்ல என்பதைப் புரிந்துகொள்ளலாம். பல நூற்றாண்டுகள் பின்னோக்கிப் போனால்அப்போது ஏற்பட்ட உயிர் அழிவுகளைப் பார்த்தால் கொரோனா ஒரு பெரிய விஷயமே இல்லை என்பதை அறிந்து கொள்ளலாம். அந்த வைரஸ்களால் எமது நாடும் அப்போது தப்பவில்லை.



இப்போது நாம் எதிர்கொண்டிருக்கும் கொரோனாவால் 7 பேர் மாத்திரமே உயிரிழந்துள்ளனர். ஆனால், 100 வருடங்களுக்கு முன் பரவிய ஸ்பானிய வைரஸ் காய்ச்சலால் 3 லட்சத்து 70 ஆயிரம் உயிர்களை நாம் இழந்தோம் என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?

20 ஆம் நூற்றாண்டில் உலகம் எதிர்கொண்ட பேராபத்துத்தான் ஸ்பெய்ன் காய்ச்சல் [spanish Flu ]. 1918 முதல் 1919 வரை இந்த வைரஸ் காய்ச்சல் உலகம் பூராகவும் பரவி இருந்தது. 50 கோடிப் பேர் இந்தக் காய்ச்சல் தொற்றுக்கு இலக்காகினர். 5 கோடிக்கு மேற்பட்டோர் இறந்தனர். அமெரிக்காவில் மட்டும் 6 லட்சத்து 75 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். அமெரிக்க படையினர் மத்தியிலேயே இந்த நோய் முதன் முதலில் கண்டு பிடிக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது.

முதலாவது உலக மகா யுத்தத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த ஒரு லட்சத்துக்கும் அதிகமான அமெரிக்க இராணுவத்தினர் மத்தியில் இருந்தே முதலாவது நோயாளி கண்டுபிடிக்கப்பட்டார் என்று சொல்கிறது வரலாறு.

முதலாவது உலகப் போர் காலமது. இந்த நோய் பற்றிய உண்மையான தகவலை வெளியிட்டால் மக்கள் கலவரமடைவார்கள் என்பதால் பல நாடுகள் இந்த நோயைப்பற்றிய இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய இறந்தவர்கள் பற்றிய உண்மைத் தகவல்களை மறைத்தன. இதனால் இப்போது பதியப்பட்டுள்ள உயிரிழப்பு பற்றிய எண்ணிக்கை ஓர் ஊகத்தில் பதியப்பட்டது தான் என்றும் சொல்லப்படுகிறது.

உலக வரலாற்றில் மிகப் பெரிய தொற்று நோயாக இந்த நோயே இதுவரை பதிவாகியுள்ளது. ஆனால், இந்த வரலாற்றை கொரோனா வைரஸ் மாற்றி எழுதுமா, இல்லையா என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியுள்ளது. கொரோனா உருவானது சீனாவின் வூஹான் நகரில் என்று சரியான பதிவு உள்ளது. ஆனால், இந்த ஸ்பெய்ன் காய்ச்சல் உருவான இடம் சரியாகத் தெரியவில்லை.

அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் கிழக்கு ஆசியா போன்ற இடங்களில் இருந்து இந்தக் காய்ச்சல் உருவாகி இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. 'எச்.1 என்1' என்ற வைரஸினால் இந்தக் காய்ச்சல் உருவானது. இந்தக் காய்ச்சல் ஸ்பெய்ன் காய்ச்சல் என்று அழைக்கப்படுவதால் இது ஸ்பெய்ன் நாட்டில் உருவானது என்று சிலர் நினைத்துக்கொண்டு இருக்கின்றனர்.

அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் பரவிய பின்தான் இந்த நோய் ஸ்பெய்னுக்கே சென்றது. அந்த நாடுகளில் இந்த நோய் பரவிய செய்தி அப்போது மறைக்கப்பட்டிருந்தது. ஆனால், ஸ்பெய்ன் உலக மகா யுத்தத்தில் கலந்துகொள்ளாமல் நடுநிலை வகித்ததால் இந்த நோய் பற்றிய தகவலை மறைக்க வேண்டிய தேவை ஸ்பெய்னுக்கு இருக்கவில்லை. உள்ளதை உள்ளபடி வெளியிட்டது. இதனால் இந்தக் காய்ச்சல் ஸ்பெய்னில் இருந்து உருவானது என்றே அப்போது பலரும் நம்பினர். இதனால்தான் இந்தக் காய்ச்சல் ஸ்பெய்ன் காய்ச்சல் என்று அழைக்கப்பட்டது.

ஐரோப்பாவின் சில நாடுகளே ஸ்பெய்ன் காய்ச்சல் என்று இதற்குப் பெயரிட்டன. ஆனால், ஸ்பெய்னோ இது பிரான்ஸில் இருந்து வந்தது என்று நம்பியதால் இதை பிரான்ஸ் காய்ச்சல் என்று அழைத்தது.

**உலகம் பூராகவும் சுற்றி வந்த இந்த வைரஸ் இலங்கையையும் விட்டு வைக்கவில்லை. கொழும்புத் துறைமுகத்தின் ஊடாகவும் தலைமன்னாரின் ஊடாகவும் இந்த வைரஸ் 1918 ஜீன் மாதம் நாட்டுக்குள் வந்தது என்று வரலாறு சொல்கிறது.**

உலகம் பூராகவும் சுற்றி வந்த இந்த வைரஸ் இலங்கையையும் விட்டுவைக்கவில்லை. கொழும்புத் துறைமுகத்தின் ஊடாகவும் தலைமன்னாரின் ஊடாகவும் இந்த வைரஸ் 1918 ஜீன் மாதம் நாட்டுக்குள் வந்தது என்று வரலாறு சொல்கிறது. நாடு பூராகவும் பரவிய அந்த வைரஸ் மட்டக்களப்பு மாவட்டத்தையே அதிகம் தாக்கியது.

ஜீன் மாதம் நுழைந்த இந்த வைரஸ் முதல் கட்டமாக குறைந்தளவில் பரவி கட்டுப்பாட்டுக்குள் வந்தது. மீண்டும் அதே வருடம் ஒக்ரோபர் மாதம் இரண்டாம் கட்டமாகப் பரவி அப்போதுதான் அதிக உயிர்களைப் பறித்தது. 1918 ஜீன் முதல் டிசெம்பர் வரை 91,600 பேர் உயிரிழந்தனர் என்று கூறப்படுகிறது.

அப்போது எமது நாடு மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்ததால் இந்த வைரஸால் நிகழ்ந்த மரணம் பற்றிய சரியான தரவு பதிவு செய்யப்படவில்லை. மாவட்டங்கள் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தன. இருந்தாலும், இந்த வைரஸால் மரணித்தவர்களின் எண்ணிக்கை 3 லட்சத்து 70 ஆயிரம் என்று பிரித்தானியத் தகவல் தெரிவிக்கின்றது. இந்தியாவில் 1.8 கோடி பேர் உயிரிழந்தனர். இந்தக் காய்ச்சலால் மஹாத்மா காந்தி கூடப் பாதிக்கப்பட்டு குணமடைந்தார்.

இப்போதைய கொரோனாவைப் போன்றே அப்போதைய ஸ்பெய்ன் காய்ச்சலுக்கும் மருந்து இருக்கவில்லை. கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கின்ற சுத்தம் மற்றும் சமூக இடைவெளி போன்றவற்றால்தான் ஸ்பானியக் காய்ச்சலும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இருந்தாலும், 5 கோடிக்கு மேற்பட்டவர்களின் உயிரைப் பறித்துத்தான் அது ஒழிந்தது.

இப்போதுள்ள கொரோனா மேற்படி வைரஸின் சாதனையை முறியடிப்பதும் அல்லது இத்தோடு ஒழிந்து போவதும் எமது கைகளில்தான் உள்ளது.

100 வருடங்களுக்கு முன் இலங்கை மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. படிப்பறிவு குறைவு, ஊடகங்கள் குறைவு. இதனால் தகவல்கள் கிடைப்பது குறைவு.

இவைதான் அன்று 3.7 லட்சம் மரணம் ஏற்படுவதற்குக் காரணம். ஆனால், இன்று நாம் அந்த நிலையில் இல்லை. முன்னேறிவிட்டோம். எல்லோர் கைகளிலும் ஊடகங்கள். விழிப்புணர்வு அதிகம். இந்தச் சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்தத் தவறுவோமானால் எப்படியான அழிவை நாம் எதிர்கொள்வோம் என்று சொல்ல முடியாது. மீண்டும் அதே அழிவு ஸ்பானிய காய்ச்சலால் ஏற்பட்ட அழிவு ஏற்படாதிருக்க நாம் அனைவரும் விழிப்புடன் இருப்போம்.



# கொவிட்-19 தொற்றுநோய் பரவலினால் ஏற்பட்ட

# வாழ்க்கை மாற்றம்:

Dr. சா. சிவயோகன்
உள மருத்துவ நிபுணர்



கொவிட்19 தொற்று ஏற்பட்ட காலத்திலிருந்து, உலகம் முழுவதும் அந்தத் தொற்றுநோய் பற்றிக் கதைக்கின்ற அளவிற்கு, அந்தத் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சைகளை வழங்கும், மற்றும் அதன் பரவலிற்கு எதிராகப் பணியாற்றும் சுகாதாரத்துறை சார்ந்தவர்களைப் பற்றியும் கதைக்கின்றது. வைத்தியர்கள், தாதியர்கள், மருத்துவ உதவியாளர்கள், ஆய்வுகூடப் பணியாளர்கள், அம்புலன்ஸ் சாரதிகள், பொதுசுகாதாரப் பரிசோதகர்கள், சமுதாய மருத்துவர்கள், புள்ளி விவரவியலாளர்கள், நிர்வாக நிபுணர்கள் என சுகாதாரத்துறை சார்ந்த ஒரு பெரும் படையினர் இந்தத் தொற்று நோய்க்கெதிராகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். சுகாதார உபகரணங்களைத் தயாரிப்பவர்களும்கூட அவற்றின் அதிகரித்த தேவை கருதி, இரவு பகலாக இயங்கித் தமது உற்பத்திகளை அதிகரித்திருக்கின்றார்கள். இவ்வாறான வெவ்வேறு வகையினரில், முன்னணியில் நின்றபடி, கொவிட்19 தொற்று ஏற்பட்டவர்களுக்குச் சிகிச்சையளிக்கும், அவர்களைப் பராமரிக்கும் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஏனைய பணியாளர்கள் பலர் தாமும் இந்தத் தொற்றுநோய்த் தாக்கத்துக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களில் கணிசமான அளவினர் மரணித்தும் இருக்கிறார்கள். தற்பொழுது, உலகம் முழுவதும் ஒன்றாகச் சேர்ந்து, சுகாதாரத் துறையினரைச் செயல் வீரர்கள் (Heroes) எனப் பாராட்டுகின்றது. இவ்வாறு, சுகாதாரத் துறையினரைப் புகழ்வது, பாராட்டுவது, மரியாதை செய்வது என்பன ஒருபுறம் இருந்தாலும், மறுபுறத்தில் சில கசப்பான உண்மைகளும் இருக்கத்தான் செய்கின்றன. பல நாடுகளில் அதிகரித்த நோயாளர்களின் எண்ணிக்கை, அந்த எண்ணிக்கைக்கு ஈடுகொடுக்க முடியாதளவு குறைந்தளவு உட்கட்டுமான மற்றும் உபகரண வசதிகள், மனித வளங்களின் பற்றாக்குறை போன்ற விடயங்கள் சுகாதாரப் பணியாளர்களின்மீது பல்வேறு சுமைகளையும், அழுத்தங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றன. அதிகரித்த வேலைப்பளு, இடைஓய்வு இல்லாத நீண்ட கடமை நேரங்கள், உடலுக்கும் உள்ளத்துக்கும் சுமையாக இருக்கும் பாதுகாப்பு உடைகள், தீர்மானம் மிக்க முடிவுகளை எடுக்க வேண்டிய சங்கடங்கள், கரணம் தப்பினால் மரணம் என்பதுபோல், எப்போதும் நோய்க்கு ஆளாகக் கூடிய இடர்தகவுகள் (Risks), தமது குடும்பத்தை விட்டு விலகி இருக்க வேண்டிய துர்ப்பாக்கியங்கள் என, இந்தத் தொற்றுநோயானது வைத்தியசாலைகளில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் சுகாதாரப் பணியாளர்களுக்கு அளவுக்கதிகமான அழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இந்தத் தொற்றுநோய்ப் பரம்பலினைக் கட்டுப்படுத்துவதற்காகப் போராடுகின்ற பொதுசுகாதாரத் துறையும், அதனுடன் இணைந்த நிர்வாகிகளும், நிபுணர்களும்கூட இரவுபகலாக, ஓய்வொழிச்சல் இன்றித் தொழிற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது சவால்கள் வித்தியாசமானவை. அவை மனிதர்களின் நடத்தைகளைக் கட்டுப்படுத்துவதோடு, அல்லது மாற்றுவதோடு தொடர்புடையவை. நோயுடையவர்களை அடையாளங் காணுதல், அவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்களைக் கண்டு பிடித்தல், அவர்களைத் தனிப்படுத்துதல், தொடர் கண்காணிப்பில் ஈடுபடுதல், நோய்த் தொற்றைக் குறைக்கும் அல்லது தடுக்கும் நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதி செய்தல், இந்த நடவடிக்கைகளுக்கு உறுதுணையாகச் செயற்படக்கூடிய பல்வேறு துறையினரை ஒருங்கிணைத்தல், அரசியல், ஊடக, மற்றும் தொழிற்சங்கங்கள் சார்ந்த அழுத்தங்களை எதிர்கொள்ளல், தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், கொவிட்19 தவிர்ந்த ஏனைய நோய்களுக்கான சிகிச்சைகள் மற்றும் பராமரிப்புகள் கிடைப்பதனை உறுதி செய்தல், வயது வித்தியாசமின்றி அனைத்து மக்களுக்கும் தேவையான சுகாதார சேவைகள் கிடைப்பதற்கு வழி செய்தல் போன்ற பல்வேறு கடமைகளை அவர்கள் இந்த இடர் காலத்தில் ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு இரவுபகலாகத் தம்பணி ஆற்றிக் கொண்டிருக்கும் வைத்தியத்துறை சார்ந்தவர்களைக் கௌரவப்படுத்துவதற்கும், அவர்களது மனவலிமையை அதிகரிப்பதற்கும் என, உலகின் பல பகுதிகளில் கைகளைத் தட்டியும், பாராட்டு வாசகங்களை உருவாக்கியும், பாடல்களைப் பாடியும், பிரார்த்தனைகள் செய்தும், தீபங்கள் மற்றும் மின்விளக்குகளை ஒளிரவிட்டும் மக்கள் தமது அன்பை வெளிப்படுத்துகிறார்கள்.

நோயுற்றவர்களின் துன்பதுயரங்களைக் குறைப்பதிலும், அவர்கள் தமது நோய்களிலிருந்து மீண்டு அதிக காலம் உயிர்வாழ்வதிலும் வைத்தியத்துறை உதவுகின்றது. கீழைத்தேயக் கலாசாரங்களில் வைத்தியத்துறை சார்ந்தவர்களைக் கடவுளுக்கு நிகராக ஒப்பிடுகின்ற ஒரு மரபும் இருக்கின்றது. இந்தக் கலாசாரங்களில் உள்ள சமயங்களின் கடவுளர் வைத்தீஸ்வரர்களாகவும், ஆரோக்கிய மாதாக்களாகவும் பெயர் பெற்றிருக்கிறார்கள். வைத்தியர்களைத் தொழுது வணங்குகின்ற ஒரு பண்பாடும் கீழைத்தேயங்களில் இருக்கின்றது.

இருந்தபோதும், கொவிட்19 தொற்றுத் தொடர்பான பயப்பீதியானது வைத்தியத்துறை சார்ந்தவர்களையும், வைத்தியத்துறையின் சேவைகளைப் பெறுபவர்களையும் தமது வழமைக்கு மாறாக நடந்து கொள்ள வைத்திருக்கின்றது. பௌதிக ரீதியிலான நெருக்கம் இந்த நோய்ப் பரவலை அதிகரித்துவிடும் என்பதனால், இப்போது வைத்தியத்துறை சார்ந்தவர்கள் தமது நோயாளிகளைப் பார்வையிட்டுப் பரிசோதிப்பதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். இது ஒரு வகையில் புரிந்து கொள்ளக் கூடியதாகவிருந்தாலும், இந்த நடைமுறை பல சவால்களை ஏற்படுத்துகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளில் இந்தப் பிரச்சினைகளை தொலைமருத்துவம் (Telemedicine) மூலம் ஈடுகட்ட முயற்சிக்கிறார்கள். வளர்ச்சியடைய முயற்சிக்கும் நாடுகளில், நோயுடன் வருபவர்களுக்கும் வைத்தியத்துறை சார்ந்தவர்களுக்கும் இடையேயான பௌதிக வெளியை அதிகரிப்பதன் மூலம் இதனைக் கையாளுகிறார்கள்.

ஓர் அகநோக்கு 10



சில இடங்களில் வைத்தியத்துறை சார்ந்தவர்களை நோய்க் காவிகளாகப் பார்க்கும் ஒரு முரண்நகையும் தற்போது ஏற்பட்டிருக்கிறது. வைத்தியசாலைகளில் பணியாற்றும் ஊழியர்களிடம் இருந்து எட்ட விலகி நிற்றல், அவர்களுக்குத் தங்குமிட வசதிகளை மறுத்தல், அவர்கள் மீது பழிசுமத்துதல் போன்ற விடயங்களும் சில இடங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றின் உச்சமாக, வீடுகளில் வைத்தியசாலைகளில் பணியாற்றும் தங்களது குடும்ப உறுப்பினர்களை விலத்தி வைக்கும், வெறுக்கும் செயற்பாடுகள் நடைபெறுவதனையும் அறியமுடிகிறது.

சுகாதாரத்துறை சார்ந்தவர்களை வெறுமனே செயல் வீரர்கள் என்று புகழ்பாடிக் கொண்டிருப்பது மாத்திரம் போதுமானதல்ல. இந்த வேளையில், அவர்களுக்குப் போதிய வசதிவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதுவும், பாதுகாப்புணர்வை அளிப்பதுவும் முக்கியமானது. ஆரோக்கியமான உணவு, குடிநீர், தங்குமிடம், பொழுதுபோக்கு அம்சங்கள் என்பவற்றை வழங்குவதோடு, பணியிடங்களில் அவர்களுக்குரிய கண்ணியம், மரியாதை போன்றவை கிடைக்கப் பெறுவதனையும் உறுதிப்படுத்த வேண்டும். அவர்கள் தாம் பாதுகாப்பாக உணரக்கூடிய வகையில், அவர்களுக்குப் போதுமான அளவு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும். கடினமான பணிகளின் பின்பு குறைந்தபட்ச ஓய்வையாவது அவர்கள் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும். அவர்கள் மனம் சோர்ந்து போகாமல் இருப்பதற்கு உதவுகின்ற அனைத்துச் செயற்பாடுகளிலும் கவனஞ் செலுத்த வேண்டும். அவர்கள் மனக்கலக்கம் அடைகின்ற வேளைகளில், அவர்களுக்குரிய உளவியல் உதவிகள் கிடைப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். சுகாதாரப் பணியாளர்கள் நோய்த்தொற்றுக்கு ஆளாகின்ற துர்ப்பாக்கியமான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்ற பொழுது, அவர்களுக்கான தகுந்த வைத்திய உதவிகள் கிடைக்கப்பெறும் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு வழங்குவதோடு, அவை அவ்வாறு கிடைப்பதனையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இவை அனைத்துக்கும் மேலாக, சுகாதாரப் பணியாளர்களின் குடும்பங்கள் பாதுகாப்பாகவும், ஆரோக்கியமான இயக்கப்பாட்டோடும் இருக்கின்றமையையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சுகாதாரத்துறை சார்ந்தவர்களும் தற்போது ஏற்பட்டுள்ள ஒரு நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி, இக்காலப் பகுதியில், தமது துறைசார் ஒழுக்க விழுமியங்களை உயர்த்துவதற்குப் பாடுபடுதல் நல்லது. சேவை மனப்பாங்கு, அர்ப்பணிப்பு, தன்னலம் கருதாப் பண்பு, தொழில் வாண்மை போன்ற இயல்புகளை மெருகூட்டுவதற்கும், நோய்களால் வருந்துபவர்களுக்கு உதவும், நோய்களை உடையவர்களின் நலன்களை முன்நிறுத்தும், நோயுடையவர்களோடும் அவர்களது குடும்பத்தினரோடும் இணைந்து திட்டமிடும் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கும் இந்த நெருக்கடியான காலப்பகுதி உதவ முடியும். கொவிட்19 தொற்றுக்குச் சிகிச்சையளிப்பதிலும், அதன் பரவலைக் கட்டுப்படுத்தும் பல்வேறு செயற்பாடுகளிலும் சுகாதாரத்துறை சார்ந்தவர்கள் மாத்திரமல்ல, படைவீரர்களும், காவல்துறையும், அத்தியாவசிய சேவைகளில் பணிபுரிபவர்களும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது பெருமைக்குரியது. மிகவும் பாராட்டத்தக்கது.

இந்தத் தொற்றுநோயினால் ஏற்பட்டிருக்கும் பேரிடரும், அது உருவாக்கியிருக்கும் நெருக்கடியும், அந்த நோய் பாரபட்சமின்றி, ஏற்றத் தாழ்வுகளின்றி அனைத்து மனிதர்களையும் பாதித்துக் கொண்டிருப்பதனையும், அந் நோயின் காரணமாக வகைதொகையின்றி மரணங்கள் நிகழ்கின்றமையையும் காலத்தின் சாட்சியாகப் பார்த்துக் கொண்டிருக்கும், அனுபவித்துக் கொண்டிருக்கும் நாம், இக்காலத்தில் இருந்தாவது செய்யும் தொழில்களுக்கும், மேற்கோள்ளும் கடமைகளுக்கும் விசுவாசமாக இருப்பதற்கும், அவற்றை விருப்போடும், அர்ப்பணிப்பு மனப்பாங்கோடும் செய்வதற்கும் பழகிக் கொள்வது நல்லது. அது காலத்தின் தேவையாகவும் உள்ளது.

ஒவ்வோர் இடருக்குப் பின்னரும் மனித குலம் தழைத்திருக்கிறது. புதிய ஒழுங்குகளோடும், விழுமியங்களோடும்.

# வீட்டுக்குள் இருந்து கொண்டாடுதலே இம்முறை புத்தாண்டுப் பரிசாகும்!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன்



**வலிகளுக்குள் வந்திருக்கும் இந்தப் புத்தாண்டு, வலி நீக்கும் மருந்தாக அமைய வேண்டும். தமிழர்களின் வாழ்வுக்கும், இலங்கைத் தீவின் எதிர்காலத்துக்கும் நல் விடியலைத் தரவேண்டும். அதற்காக நாம் அனைவரும் தத்தம் வீடுகளுக்குள்ளேயே புத்தாண்டைக் கொண்டாடுவதே, இலங்கையர் அனைவருக்கும் நாம் தரும் புதுவருடப் பரிசாக இருக்க முடியும் என்று தனது புத்தாண்டு வாழ்த்துரையில் குறிப்பிட்டுள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன்.**

அவர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துரையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இன்று தமிழ் சிங்களப் புத்தாண்டு. வழக்கமாக புத்தாண்டு தினத்தன்று இருக்கும் கொண்டாட்டங்கள், கோலாகலங்கள், வெடிச் சத்தங்கள், இனிப்புப் பரிமாற்றங்கள் என்று எதுவும் இல்லாமல் நெஞ்சம் நிறைந்த வேதனையுடனும், கொரோனா வைரஸின் வலிகளுக்கு மத்தியிலும் இந்தப் புதுவருடத்தை நாம் எதிர்கொண்டுள்ளோம்.

சீனாவின் வுகான் மாகாணத்தில் டிசெம்பரில் அவதானிக்கப்பட்ட கொரோனா என்னும் கொவிட் 19 ஆட்கொல்லி வைரஸ், இன்று உலகின் 215 நாடுகளில் வேரூன்றி ஒட்டுமொத்த உலகையும் கிலி கொள்ள வைத்துள்ளது. அமெரிக்கா, ஸ்பெய்ன், இத்தாலி, இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகள் கற்பனைக்கும் எட்டாத வகையில் பெரும் துன்பத்தை எதிர்கொண்டுள்ளன. இலங்கைத் தீவும் இந்தக் கொரோனாவின் கோரப்பிடிக்குள் சிக்கித் தவிக்கின்றது.

அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலைப்பாட்டைக் கண்டறிதல், காணி விடுவிப்பு, பௌத்த மயமாக்கலுக்கு எதிரான போர் என்று அனுதினம் ஏகப்பட்ட பிரச்சினைக்குள் தமது அன்றாட நாள்களைச் செலவிட்டுக் கொண்டிருக்கும் எம் தமிழ் இனம் இன்று கொரோனா என்னும் கொடிய அரக்கனின் பிடிக்குள்ளும் சிக்கி, சொல்லொணா வலியையும் வேதனையையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

வலிகளுக்குள் பிறந்திருக்கும் இந்தப் புத்தாண்டு, சகலரினதும் வலி நீக்கும் மருந்தாக அமைய வேண்டும். தமிழர்களின் வாழ்வுக்கும், இலங்கைத் தீவின் எதிர்காலத்துக்கும் நல் விடியலைத் தரவேண்டும்.

இன்று புத்தாண்டு என்று அதனைக் கொண்டாட வீதிகளுக்கு வருவதோ, உறவினர்களோடு ஒன்று கூடி மகிழ்வதோ இத்தனை நாளும் ஊரடங்கு போட்டு கட்டுப்படுத்தி வரும் கொரோனா எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒன்றுமில்லாமல் செய்துவிடக் கூடும். எனவே இந்தவருடம் பிறந்திருக்கும் இந்தப் புத்தாண்டை வீட்டுக்குள் இருந்தே கொண்டாடி மகிழ்வதே இலங்கையர் அனைவருக்கும், நாம் கொடுக்கும் புதுவருடப் பரிசாக இருக்க முடியும்- என்றுள்ளது. (ம)

# மரண அறிவித்தல்



## உதயகுமார் பேரம்பலம்

யாழ். கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும். கனடாவை வதிவிடமாகவும் கொண்ட உதயகுமார் பேரம்பலம் அவர்கள் 10.04.2020 வெள்ளிக்கிழமை அன்று இறைபாதம் அடைந்தார்.

அன்னார். காலஞ்சென்ற பேரம்பலம். இந்திராணி தம்பதிகளின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் சந்திரமலர் தம்பதிகளின் அன்பு மருமகனும். உமாவின் அன்புக் கணவரும். வினுசா. வினுசன். விதுரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும். வவா (கனடா). ரகு (கனடா). சூட்டி (இலங்கை). ஈசன் (கனடா). றூபா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும். தாஸ். நிலாணி. வசந்தன். ஜெயந்தி. அஜந்தன். கணேஸ்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் செவ்வாய்கிழமை (14.4.2020) மாலை 5.30 மணியளவில் கனடாவில் தகனம் செய்யப்படும்.

ஈசன் - சகோதரர் (Canada)
Mobile : +14167254193
கணேஸ்குமார் - மைத்துனர் (Canada)
Mobile : +16478665378
ரகு - சகோதரர்
Phone : +19059853334
நந்தன் - மாமா
Mobile : +14168309277
பவளகேசி (Jaffna)
Mobile : 0771234745

**தகவல்:**
**சூட்டி அக்கா குடும்பத்தினர்,**
**யாழ்ப்பாணம்.**

# இல்லாதவர்களுக்கு இந்நாளில் உதவுங்கள்

## ஆதீனக் குருமுதல்வர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.13

மலரும் புத்தாண்டை வீட்டிலிருந்தே குடும்ப உறவுகளுடன் இறை பிரார்த்தனையுடன் கொண்டாடுவோம். இல்லாதவர்களுக்கு உதவும் கைங்கரியத்துடன் புது வருடத்தைக் கடைப்பிடியுங்கள் என்று நல்லூர், தென்கயிலை, கீரிமலை சைவ ஆதீன குருமுதல்வர்கள் மக்களிடம் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குருமுதல்வர்களால் வெளியிடப்பட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலகின் மிகவும் நெருக்கடியான துன்பகரமான நோயின் தாக்கத்தின் விளைவுகளுடன் புதிய தமிழ் சிங்கள புத்தாண்டு மலர்கின்றது.

இந்த முக்கியமான தருணத்தில் எம்மிடையே உள்ள சகல வேற்றுமைகளையும் மறந்து, சகோதரத்துவத்துடன் கொடிய கொரோனா நோயிலிலிருந்து விடுபட எம்மால் இயன்ற சகல சுகாதார வழிமுறைகளையும், மானசீகமாகக் கடைப்பிடிக்க உறுதி எடுப்போம்.

அயலில் யாராவது பசித்திருந்தால் அவர்களுக்கு இயன்றவரை உதவுவோம். சமூகத்தின் நலிவுற்ற பிரிவினராகிய முதியோர், கர்ப்பிணிகள், குழந்தைகள் நோயாளிகளின் நலனில் அதிக கவனம் எடுப்போம்.

உள்ளம் பெரும் கோயில் எனும் தத்துவத்தை உணர்ந்து ஆலய புற வழிபாடுகளை கொடிய தொற்றுக் காலத்தில் தவிர்த்து,உள்ளன்போடு எம் இல்லங்களிலிருந்து தாய், தந்தையினரின் ஆசீர்வாதத்தோடு எமது வழிபாடுகளை எளிமையான சமய சம்பிரதாயங்களுடன் கடைப் பிடிப்போம்.

மருத்து நீர் போன்றவற்றை எமக்கு வீட்டில் கிடைக்கும் மூலிகை இலைகள் கொண்டே தயாரிப்போம். இந்த காலத்தில் புத்தாடை புனைதல் உட்பட அனைத்து ஆடம்பரங்களையும் தவிர்ப்போம்.

பல ஆலயங்களும், அமைப்புக்களும், தன்னார்வலர்களும் ஆற்றி வரும் நிவாரணப் பணிகள் மனதுக்கு நிறைவைத் தருகின்றன. அவை மலரும் புத்தாண்டிலும் இன்னும் வீச்சுடன், கொடிய நோய் விளைவுகள் முடியும் வரை தொடரப்பட வேண்டும். அதற்கு அனைத்து சைவசமயத்தவர்களும் பங்களிக்க வேண்டும்.

அன்பே உருவான சிவப் பரம்பொருள் கொடிய துயரத்திலிருந்து எம்மை விடுவித்து, எம் எல்லோர் மனங்களிலும் அன்பும், அறமும் ஓங்க செய்ய வேண்டும் என மலரும் புத்தாண்டில் இலங்கையின் சைவ ஆதீனங்களின் குரு முதல்வர்களாகிய நாம் கூட்டாக உருக்கமான பிரார்த்தனையுடன் வேண்டுகின்றோம். என்றுள்ளது. (க)

# வீட்டில் இருந்து இறைவழிபட்டோடு
# புத்தாண்டைக் கொண்டாடலாம்

## இந்துசாதனம் பத்திரிகை ஆசிரியர் பதிவு

**யாழ்ப்பாணம், ஏப். 13**

**சித்திரைப் புத்தாண்டு பிறப்பை தற்போதுள்ள சூழலில் எப்படி கொண்டாடலாம் என்று விளக்கும் வகையில் இந்துசாதனம் பத்திரிகையின் ஆசிரியர் தியாக மயூரகிரிக் குருக்கள் ஒரு பதிவை வெளியிட்டுள்ளார்.**

அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்று 13ஆம் திகதி திங்கட்கிழமை வாக்கிய பஞ்சாங்கப்படி இரவு 7.26 மணிக்கும், திருக்கணித பஞ்சாங்கப்படி இரவு 8.23 மணிக்கும் சார்வரி புத்தாண்டு மலர்கிறது. நாளை பிற்பகல் 3.30 மணி முதல் நள்ளிரவு வரை விஷுபுண்ணிய காலம் அமைகிறது. இந்தக் காலத்தில் சூர்ய அஸ்தமனத்துக்கு முன்னதாக மருத்துநீர் வைத்து நீராட வேண்டும். (கிரஹண புண்ணிய காலம் தவிர பிற நாள்களில் இரவில் நீராடுவதை தவிர்ப்பது நல்லது) மருத்து நீர் கிடைக்காதவர்கள் துளசி, அறுகு, பால், கோசலம், கோமயம் போன்றன சொற்பம் சேர்த்த மஞ்சள் நீரில் நீராடலாம்.

இந்த ஆண்டுக்கு வெண் பட்டாடை சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் புத்தாடை புனையக் கூடிய சூழல் இன்மையால் தோய்த் துலர்ந்த தூய ஆடை அணியலாம்.

நாளை இரவுக்கு முந்தைய பிற்பகல் தான தருமங்களுக்கு விசேஷமான காலம். இந்தக் காலத்தில் செய்யும் தானம் ஆயிரம் மடங்கு பலன் என்று சொல்லப்படுகிறது. எனவே, இயன்றோர் வறியோர், சூழ்நிலையால் பாதிக்கப்பட்டவர்கள், ஆலய அர்ச்சகர்கள், போன்றவர்களுக்கு இயன்ற உதவிகளை செய்வது நல்லது.

வருஷப்பிறப்பு வேளையில் இல்லத்து சுவாமி அறையில் தீபம் ஏற்றி தோத்திரங்களைச் சொல்லி வழிபடல் வேண்டும்.

பஞ்சாங்கம் வாங்கி வைத்திருப்பவர்கள் பஞ்சாங்க புத்தகத்துக்கு சந்தனம், குங்குமம், பூ வைத்து வழிபட்டு சில பக்கங்களை வாசிக்கலாம்.

இரவில் வருஷம் பிறப்பதால் மறுநாள் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமையே சித்திரை முதல் நாளாக கொள்ளப்படுகிறது. அந்நாள் காலையில் மங்கலப் பொருள்களில் கண் விழிப்பதும் சிறப்பு. அதனை 'கனி காணல்' என்பர்.

விஷு புண்ணிய கால தர்ப்பணம் செய்பவர்கள் இன்று திங்கட்கிழமை பிற்பகலில் செய்து பிதிர்களை வழிபடவேண்டும்.

புத்தாண்டு அன்று 'நிம்பகுசும்ப பக்ஷணம்' என்ற வேப்பம் பூவில் செய்யப்பட்ட ஏதாவது உணவு வகையை உணவில் சேர்ப்பது சிறப்பு.

கைவிசேஷம் பெற நல்ல நேரம் திங்கட்கிழமை பின்னிரவு (ஆங்கிலக்கணிப்புப் படி செவ்வாய் 14ஆம் திகதி அதிகாலை) 5 மணி முதல் 6 மணி வரையாகும்.

பொன் ஏர் கட்ட நல்ல நாள் அல்லது விவசாயம் தொடங்க 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6மணி முதல் 7 மணி வரை அல்லது அன்று மதியம் 12 மணி முதல் 2 மணி வரை நல்ல நேரமாகும்.

**இந்த வருஷத்துக்கு**

அரசர் புதன்
மந்திரி சந்திரன்
சேனாதிபதி சூரியன்
ஸஸ்யாதிபதி வியாழன்
தானியாதிபதி செவ்வாய்
இராசாதிபதி சனி
தேவதை ஹிரண்ய கர்ப்பர்

துன்பங்கள் அகல, நோய்கள் விலக, இன்பமே பெருக, எல்லாம் வல்ல இறைவன் சார்வரி ஆண்டில் தன் பெருங்கருணையால் அருளட்டும் என்று பிரார்த்திப்போம், என்று பதிவிட்டுள்ளார். (ஒ,5)

# ஒன்றிணைந்து பிரார்த்திப்போம்

யாழ்ப்பாணம்,ஏப்.13

கொரோனா வைரஸ் தொற்றால் நாடு மட்டுமல்ல உலகமே கலங்கி பரிதவித்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழலில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து இறை வழிபாடுகள் செய்ய வேண்டும்.

இவ்வாறு இந்துக் குருமார் அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. புதுவருடப் பிறப்பைமுன்னிட்டுஅனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புதியவருடம்அனைவருக்கும் நல்லதாக அமைய வேண்டும். தேகாரோக்கியம், மன ஆரோக்கியம், என்பவற்றுடன் சுபீட்சகரமான வாழ்வுடன் அமையும் ஆண்டாக மலர வேண்டும். நிகழ்காலதுன்பத்துக்கும், எதிர்காலத் துன்பத்துக்கும் நிவாரணம் தரும் நற்காரியம் எதுவோ அதை நாம் ஆர்வத்துடன் செய்ய வேண்டும். எமக்கு இறை அருள் கிடைக்க வேண்டும். மனித சமூகத்துக்கு நன்மை உண்டாகட்டும். தாவரங்கள் மேலோங்கி வளரட்டும். பயிர்கள் செழித்து வளரட்டும். அன்பே உருவான பரம்பொருளை வேண்டி இறை பிரார்த்தனை செய்து எமது மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் பகிர்ந்து கொள்கிறோம். என்றுள்ளது. (க)

## சடலமாக மீட்கப்பட்டவர் அடையாளம் காணப்பட்டார்

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ்ப்பாணம் முனியப்பர் கோயில் பகுதியில் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் வவுனியா நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த பேதுருப்பிள்ளை அல்பிரட் (வயது - 65) என்று தெரியவந்துள்ளது. அவர் யாசகம் பெறுபவர் அல்ல என்றும், ஆலயத்தில் தங்கியிருந்தவர் என்றும் அறியவந்துள்ளது. (ஒ.5)

# அதிக விலைக்கு அரிசி விற்பனை

## 4 வர்த்தகர்கள் சிக்கினர்





யாழ்ப்பாணம்,ஏப்.13

யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அரசின் கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசி விற்பனை செய்த 4 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

பொதுமக்களின் முறைப்பாட்டின் அடிப்படையிலே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்று அதிகார சபையின் யாழ்ப்பாணம் மாவட்ட அலுவலகம் தெரிவித்தது.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளரின் உத்தரவுக்கு அமைவாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை உத்தியோத்தர்களால் யாழ்ப்பாணம், திருநெல்வேலி மற்றும் மானிப்பாய் ஆகிய இடங்களில் வர்த்தக நிலையங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை சோதனைக்குட்படுத்தப்பட்டன.

பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக, 4வர்த்தக நிலையங்களில் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைக்கும் அதிகமான விலையில் அரிசியை விற்பனை செய்தமை கண்டறியப்பட்டது.

'அந்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. மேலும் வர்த்தக நிலையங்களில் நியாயமான விலைகளில் அத்தியாவசியப் பொருள்கள் பாவனையாளர்களுக்குக் கிடைப்பதற்கான வழிவகைகளும் மேற்கொள்ளப்பட்டன ' என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் யாழ்ப்பாணம் மாவட்ட அலுவலகத்தினர் தெரிவித்தனர். (க)



# வருகிறது இன்சுலின்

கொழும்பு, ஏப். 13

ஒரு தொகை இன்சுலின் மருந்து இன்று திங்கட்கிழமை இலங்கைக்கு எடுத்து வரப்படவுள்ளதாக, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மருத்துவ நிபுணர் பிரசன் குணசேன தெரிவித்துள்ளார்.

ஏனைய மருந்துகளையும் தட்டுப்பாடின்றி மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், வாராந்தம் இன்சுலின் வகைகளை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ.5)

# பெருந்துயரைத் துடைக்கும் கொடையாளர்கள்




ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்துள்ள மக்களுக்கு ஆலய முகாமைத்துவ சபையினர் மற்றும் வர்த்தகர்கள் வன்னி சுதந்திர ஊடகவியலாளர்கள், புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா மற்றும் நன்கொடையாளர்கள் உதவிப் பொருள்களை வழங்கி வருகின்றனர். ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய முகாமைத்துவ சபை ஊடாக சிவன் மோட்டார்ஸ் நிறுவன உரிமையாளர் பாலன் ஒருதொகை உணவுப் பொதிகளை வழங்கியுள்ளார். (ம-500)





புலம்பெயர் தமிழ் மக்களின் நிதி உதவியில் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கேவில், வெற்றிலைகேணி, ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன், மருதங்கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 150 பயனாளிகளுக்கு அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம)



கிளிநொச்சி பிரமந்தனாறு மகா வித்தியாலய பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களின் நிதிப் பங்களிப்பில் பாடசாலையில் கல்விகற்கும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 50 மாணவர்களின் குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)





இலங்கையின் பல பாகங்களில் மக்கள் நலத்திட்டங்களை அதிக அளவில் முன்னெடுத்து வரும் சுசீலன் பௌண்டேசன், கொரோனா நிவாரணத் திட்டத்தை தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் முல்லைத்தீவு கள்ளப்பாடு கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 40 குடும்பங்களுக்கும், முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட 25 குடும்பங்களுக்கும் அண்மையில் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-222)



திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பகுதிகளில் வாழும் பலருக்கு அரசால் தற்போது வழங்கப்படும் சிறப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. விசேட தேவையுடையோர்கள், சிறுநீரக நோயாளர்கள், முதியோர்கள் ஆகியோருக்கே மேற்படி கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. (ம-40)



ஊரடங்கு உத்தரவால், முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் 2ஆம் வட்டாரம் கோம்பாவில் கிராமத்தில் பாதிக்கப்பட்டுள்ள 55 குடும்பங்களுக்கு அகரம் உதவும் கரங்கள் அமைப்பால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-222)



வற்றாநதி மக்கள் நலன் பேணல் அமைப்பின் ஊடாக குமாரையா ரேடர்ஸ் உரிமையாளருமான மகேந்திரனின் நிதிப்பங்களிப்புடன் கேப்பாபிலவு கிராம அலுவலர் பிரிவில் பிலக்குடியிருப்பு, சூரிபுரம், கேப்பாபிலவு மாதிரிக்கிராமம் ஆகிய கிராமங்களில் கொரோனா வைரஸ் காரணமாக தொழில்கள் இன்றி உணவுக்குக் கஸ்டப்படும் 70 குடும்பங்களிற்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)





சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினால் மூளாய் கிழக்கு முன்கோடை கிராமத்தைச் சேர்ந்த சுமார் 40 குடும்பங்களுக்கும் பண்டத்தரிப்பு பகுதியில் வெளியிடங்களில் இருந்து வந்து, சொந்த இடங்களுக்கு மீளச் செல்ல முடியாமல் உறவினர் வீடுகளில் தொடர்ச்சியாகத் தங்கியுள்ள சுமார் 20 குடும்பங்களுக்கும் உணவுப் பொருட்கள் நேற்று வழங்கப்பட்டன. (ம)



கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 45 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணம் சமூக மறுவாழ்வு அமைப்பு மற்றும் சிற்றி லயன்ஸ் கழகத்தின் ஊடாக இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம)

# கொரோனாவிலிருந்து தப்பினாலும் பட்டினிச் சாவை தவிர்க்க முடியாது

## வடக்கு கிழக்கு உற்பத்தியாளர்களையும் கணக்கெடுக்கவில்லை பொருளாதார நிபுணர் அரசுக்கும் மக்களுக்கும் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 12
வடக்கு கிழக்கு உற்பத்தியாளர்களை பொருட்டாக கொள்ளாது தேசிய பொருளாதார கொள்கை வகுப்புக்கள் தவறாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிலையில், கொரோனாவால் ஏற்படும் உயிரிழப்புக்களை அரசு தவிர்த்தாலும் அதற்கு அடுத்து வரப்போகும் காலத்தில் பட்டினியால் ஏற்படப்போகும் உயிரிழப்புக்களைத் தவிர்க்க முடியாத நிலைமையே தற்போதைக்கு உள்ளது.

இவ்வாறு பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் டெஸ்மண்ட் மல்லிகராச்சி தெரிவித்தார்.

கொரோனா பாதிப்பு இலங்கையை மட்டுமன்றி உலகையே கட்டிப்போட்டுள்ளது. இந்த நிலையில், இலங்கை போன்ற நடுத்தர வருமானம் கொண்ட நாட்டின் எதிர்கால நிலைமைகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையில் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை புதிய தாராளவாதத்தைப் பின்பற்றியே வந்தது. இதனால் கடன் மற்றும் இறக்குமதி பொருளாதாரத்தையே அதிகளவில் ஊக்குவித்ததோடு உள்நாட்டு உற்பத்திகள் தொடர்பில் சற்றேனும் சிந்திக்காத நிலைமையே காணப்பட்டது. இலங்கையின் இறக்குமதியில் செல்வாக்குச் செலுத்திக்கொண்டிருந்த அனைத்து நாடுகளும் கொரோனா தாக்கத்தால் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இலங்கை மிகப்பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. அமெரிக்காவில் கொரோனாவின் தாக்கத்தால் 66இலட்சம் பேர் வேலைகளை இழந்து வழக்குத் தாக்கல் செய்வதற்கு தயாராகின்றனர். ஏனைய மேற்குலக நாடுகளின் நிலைமைகளும் மோசமாகவே உள்ளன. இந்தியாவில் கொரோனாவால் நிலைமைகள் எவ்வாறு செல்லும் என்று கணிக்க முடியாத சூழலில் இலங்கை இந்தியாவை முழுமையாக நம்பிதங்கியிருக்க முடியாது. இவற்றை விடவும் உள்நாட்டில் பிராந்திய, இன ரீதியான பாரபட்சங்களால் உற்பத்தியாளர்களைக் கருத்திலெடுக்காத நிலைமையும் நீடித்திருந்தது.

### ஆட்சிப் பீடத்தவரின் காலம்பிந்திய ஞானம்

தவறான பொருளாதார கொள்கையை இத்தனை காலமும் பின்பற்றிவந்த நிலையில் கொரோனாவின் தாக்கம் ஏற்பட்டவுடன் திடீரென விழித்தெழுந்து உள்நாட்டு உற்பதிகளை அதிகரியுங்கள். ஒதுக்கீடுகளை மேற்கொள்ளுங்கள் என்று ஆட்சிப்பீடத்தில் இருப்பவர்கள் அரசியல் இலாபத்துக்காகக் கூறினாலும் அவை செயற்பாட்டு ரீதியில் எவ்விதமான முன்னேற்றங்களையும் உடன் பிரதிபலிக்காது.

ஆகவே, கொரோனாவினால் ஏற்படும் உயிரிழப்புக்களை அரசு தவிர்த்தாலும் அதற்கு அடுத்து வரப்போகும் காலத்தில் பட்டினியால் ஏற்படப்போகும் உயிரிழப்புக்களைத் தவிர்க்க முடியாத நிலைமையே தற்போதைக்கு உள்ளது.

தேர்தலை இலக்காக வைத்து வேகமான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதால் பொதுமக்கள் தங்களின் உயிர்களைக் காத்துக் கொள்வதற்காக சரியான நபர்களை பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்ய வேண்டும். என்றார்.

### நாட்டுக்கு வருமானத்தைவிடவும் செலவீனமே அதிகரிக்கவுள்ளது

யாழ்ப்பாணப் பல்கலைகழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. எஸ். விஜயகுமார் தெரிவித்ததாவது:

அண்மைய காலங்களில் இலங்கை முழுமையாக பிற நாடுகளிடம் தங்கியிருக்கும் நிலைமைக்குள் சென்றிருந்தது. தற்போது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யமுடியாத நிலைமையால் வெகுவான நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றது.

தேயிலை, இறப்பர், தெங்கு ஏற்றுமதிகள், ஆடை ஏற்றுமதிகள் உள்ளிட்ட அனைத்தும் ஸ்தம்பித்துவிட்டன. உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது. எனினும், அது உடனடியான சாத்தியத்தைக் கொண்டிருப்பதாக கூற முடியாது.

ஆகவே கொரோனாவின் தாக்கத்திலிருந்து நாடு விடுபட்டாலும் பொருள்களை இறக்குமதி செய்யும் செயன்முறையிலிருந்து முழுமையாக வெளியேறிவிட முடியாது.

ஆகவே திறந்த பொருளாதாரத்துடன் இறக்குமதி பதிலீடுகளையும் ஒன்றிணைக்கும் புதிய பொருளாதாரக் கொள்கை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது - என்றார். (கு)

---

# இலங்கையர் கடன்பெற்றே உயிர் வாழலாம்!

## நிலைமையை விளக்குகிறார் பொருளாதாரத்துறைப் பேராசிரியர்

கொழும்பு, ஏப். 12
உள்நாட்டு உற்பத்திகளைத் தவிர்த்து வெளிநாடுகளில் தங்கியிருக்கும் பொருளாதாரக் கொள்கைளைப் பின்பற்றி வந்தமையால் அடுத்துவரும் காலப்பகுதியில் ஏற்படப்போகும் மோசமான நிலைமைகளைத் தவிர்க்கவே முடியாது. இனி இலங்கை தனது பொருளாதார நிலைமையைக் கையாள்வதற்கு இருக்கும் ஒரே வழி கடன்களைப் பெறுவதுதான். இதைவிட வேறுவழியில்லை.

இவ்வாறு தெரிவித்துள்ளார், கொழும்பு பல்கலைக் கழகத்தின் பொருளாதாரத்துறைப் பேராசிரியர் கோ. அமிர்தலிங்கம். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் காரணமாக நாடு இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் ஏற்படுகின்ற பொருளாதார நெருக்கடிகளின் போது இலங்கையின் உள்நாட்டிலும் அதன் தாக்கங்கள் வெகுவாக ஏற்பட்டே வந்திருக்கின்றன. உலகளவில் பல்வேறுபட்ட துறைகளில் பாதிப்பு ஏற்படுவதால் இலங்கையிலும் தாக்கம் வெகுவாக இருக்கும். இலங்கையைப் பொறுத்தவரையில் மொத்த வருமானத்தில் 7சதவீதத்தை விவசாயத்துறை மூலமாகவும், 29 சதவீதத்தை கைத்தொழில் துறையும் எஞ்சியவை சேவைத்துறை ஊடாகவும் கிடைக்கி ன்றது.

### விவசாய உற்பத்தி?

தற்போது விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்த முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் தமது பொருள்களைச் சந்தைப்படுத்துவதுதொடர்பான உறுதிப்பாடற்ற நிலைமையால் அடுத்தபோகத்தில் அவர்கள் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவார்களா என்பதே கேள்விக்குறியாகியுள்ளது. அவர்கள் தமது இழப்பீடுகளுக்கான நட்ட ஈடுகளைப் பெறுதல், கடன்களை மீளச் செலுத்துதல் போன்ற வற்றிலும் சவால்களைச் சந்திக்கின்றார்கள்.

இதனால் அடுத்தகட்டச் செயற்பாடுகள் தொடர்பில் அவர்கள் பின்னடிப்புக்களைச் செய்யமுடியும். இந்தநிலையில் இலங்கையில் மீன்பிடித்துறை மட்டுமே உடனடியாக செயற்படக்கூடிய நிலையில் உள்ளது. அதன் உற்பத்தியையும், ஏற்றுமதியையும் மட்டுமே உடனடியாக அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

### கைத்தொழில் துறை

கைத்தொழில் துறையில் ஆடைத் துறையே பெருமளவான வருமானத்தை இலங்கைக்குப் பெற்றுத்தருகின்றது. தற்போதைய முடக்கத்தால் 1.5பில்லின் டொலர்கள் வருமானத்தை அந்தத் துறை இழந்துள்ளது. அரசு 25மில்லியன்களை அந்தத் துறையின் மீள் செயற்பாட்டுக்கு ஒதுக்கீடு செய்தாலும் அது போதுமானதாக இல்லை. இதனால் அத்துறை மீள இயங்க ஆரம்பித்தாலும் தமது தொழிலாளர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியைக்கூட குறைந்தது ஆறு மாதங்கள் செலுத்த முடியாத நிலைமை இருக்கின்றது.

ஆறு மாதங்கள் ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்தாதிருக்கும் வகையிலான விலக்கழிப்பை வழங்குமாறு அந்தத் துறையினர் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

### பூச்சிய நிலையில் உல்லாசத்துறை

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் சிதைந்து போயிருந்த உல்லாசத்துறை தற்போது மீண்டெழுந்து கொண்டிருக்கையில் கொரோனா தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் 8சதவீத வருமானத்தினைப் பெற்றுத் தரும் அந்தத்துறை தற்போது பூச்சிய நிலைக்குச் சென்றுவிட்டது. இதற்கு அடுத்தபடியாக கட்டுமானத் துறையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

### வேலையிழப்பு

முறைசாரா ஊழியர்கள் வேலை இழப்பைச் சந்தித்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போதைய நிலைமை தொடர்ந்தால் தனியார் துறை ஊழியர்களும் பெருமளவில் வேலை இழப்பைச் சந்திப்பதற்கே வாய்ப்புக்கள் உள்ளன.

### ஏற்றுமதியும் இராது இறக்குமதியும் இராது

கொரோன பாதிப்பிலிருந்து இலங்கை மீண்டாலும் உடனடியாக ஏற்றுமதி இறக்குமதி செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாத சூழலே உள்ளது. ஆகவே 70சதவீதம் ஏற்றுமதி இறக்குமதி செயற்பாடுகளில் ஈடுபடும் நாடாக இருக்கும் இலங்கையால் அதனையும் மேற்கொள்ள முடியாது.

இலங்கை தனது பொருள்களை சேவைகளை ஏற்றுமதி செய்யும் அமெரிக்கா, கனடா உட்பட ஐரோப்பிய நாடுகளும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இதனால் ஏற்றுமதியும் வெகுவாக பாதிக்கப்படும்.

### கடன்பெறுவதே ஒரே வழி

குறைந்த வட்டிவீதத்திலான கடன்களை மட்டுமே இலங்கையால் உடனடியாகப் பெறமுடியும். அதனையும் சீனாவிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான நிலைமைகளே அதிகமுள்ளன. ஆனால் இலங்கை ஏற்கனவே பெற்றுள்ள கடன்களையும் அதற்கான வட்டியையும் செலுத்துவதற்கு மொத்த வருமானத்தில் 53சதவீதத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டிய நிலையில் இருக்கையில் மேலதிக கடன்களைப் பெறுவது நாட்டின் மொத்த கடன்சுமையை மேலும் அதிகரிப்பதாகவே அமையும். - என்றார். (கு)

# பெருந்துயரைத் துடைக்கும் கொடையாளர்கள்



சுவிஸில் வசித்துவரும் நாதன் என்பவரின் நிதி உதவியில் உருத்திரபுரம் பிரதேசத்தில் வசிக்கும் வறுமைக்கு உட்பட்ட 353 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)





முன்னாள் நாடாளுமன்ற ச.கனகரத்தினத்தின் ஏற்பாட்டில் நெதர்லாந்தில் வசிக்கும் ச.குமாரசாமி என்பவரின் நிதி உதவியில் பரிசங்குளம், பண்டாரவன்னியன் கிராமங்களில் உள்ள வறுமைக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-500)



வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தை சேர்ந்த கன்னாட்டி பிரமணாளங்குளம் நீலியாமோட்டை கிராமங்களைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு செட்டிகுளம் பங்கு கத்தோலிக்க மக்களின் பங்களிப்புடன் உலர்உணவுப் பொருட்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. (ம)

## 27 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள்

தென்மராட்சி பிரதேசத்தில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்களில் தெரிவுசெய்யப்பட்ட 27 நலிவுற்ற குடும்பங்களுக்கு, தமிழ்நாட்டு உறவு ஒருவர் உள்ளிட்ட உள்ளூர் மற்றும் புலம்பெயர்வாழ் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தலால் நாடு முடக்கப்பட்டுள்ள இந்தக் கால கட்டத்தில் வாழ்வாதாரத்தை முன்னெடுக்க முடியாது தவித்துவந்த குடும்பங்களை இனம் கண்டு இந்த உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

கொடிகாமம், கச்சாய், வரணி பகுதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கே மேற்படி உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தினரது அடுத்தகட்டப் பணியாக, கொரோனா வைரஸ் தாக்கத்தின் தீவிரத்தன்மையை அறிந்தும் மக்களோடு மக்களாக நின்று பணியாற்றி வருகின்ற பிரதேச செயலக அலுவலர்களுக்கு முகக்கவசம் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ம)





தாய்தேசம் அறக்கட்டளையின் 'ஒருவருக்கு ஒரு கிலோ கோதுமை மா' என்ற திட்டம் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தென்மராட்சிப் பகுதியில் வாழும் மக்களுக்கு அண்மையில் மா வழங்கப்பட்டது. (ம-159)



யாழ்ப்பாண பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அத்தியடி சிதம்பர நடராஜ வீரகத்தி பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர், தற்போதைய சூழலில் மிகவும் நலிவுற்றிருக்கும் மக்களுக்கு உலர்உணவுப் பொருட்கள் வழங்குவதற்காக 10,000 ரூபா நிதியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்கள். (ம)





தென்மராட்சி சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொருட்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வழங்கப்பட்டன. சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோரின் ஏற்பாட்டிலேயே குறித்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



புங்குடுதீவு நலன்புரிச் சங்கத்தின் ஊடாக பரராஜசிங்கம் இராதாகிருஷ்ணன், தீபா தம்பதிகளின் நிதி உதவியில் சுமார் 100 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம)

# 22,000 மருத்துவப் பணியாளர்களுக்குக் கொரோனா





வுகான், ஏப். 13
உலகம் முழுவதும் 22,000 மருத்துவப் பணியாளர்களுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என்ற அதிர்ச்சித் தகவல் வெளிவந்துள்ளது.
சீனாவின் வுகான் நகரில் கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் கொரோனா வைரஸ் அவதானிக்கப்பட்டது. அதன் பின்னர் துரித கதியில் பரவிய அந்த வைரஸ் தற்போது உலகில் 210க்கும் அதிகமான நாடுகளில் வேரூன்றியுள்ளது.
இந்தக் கொடிய வைரஸை எதிர்த்து உலக நாடுகளில் இருந்து மருத்துவக் குழுக்கள் கடும் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றன. 18 லட்சம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் ஒரு லட்சத்து 10ஆயிரம் பேர் இறந்துள்ளனர். சுமார் 4 லட்சம் பேர் நலம் பெற்று வீடு திரும்பியுள்ளனர்.
இந்த நிலையில், உலகமெங்கும் சுமார் 22 ஆயிரம் மருத்துவப் பணியாளர்களுக்குக் கொரோனா தொற்று இருப்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த மருத்துவப் பணியாளர்களின் குடும்பங்களும் தற்போது தனிமைப்படுத்தப்பட்டு அதி தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன. (ம)

## ஆப்கானிஸ்தான் அதிபர் மாளிகையில் 20 பேருக்கு கொரோனா

காபுல், ஏப். 13
ஆப்கானிஸ்தான் அதிபர் மாளிகையில் 20 பேருக்குக் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இதுகுறித்து ஆப்கானிஸ்தான் ஊடகங்கள், 'ஆப்கானிஸ்தானில் அதிபர் மாளிகையில் பணிபுரிந்த 20 பணியாளர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்குத் தொற்று ஏற்பட்டதற்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது' என்று செய்தி வெளியிட்டுள்ளன. (ம)



# உயிரித் தாக்குதல்களுக்கு வித்திட்டது கொரோனா!

## அவதானம் அவசியம் என எச்சரிக்கிறார் குத்தேரஸ்



வொஷிங்டன், ஏப்ரல் 13
நுண் உயிரித் தாக்குதல் நடத்துவதற்கு கொரோனா வைரஸ் வழிகாட்டியுள்ளது. எனவே உலக நாடுகள் இனிவரும் காலங்களில் மிகமிக அவதானமாக இருக்க வேண்டும் என்று எச்சரித்துள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் குத்தேரஸ்.
கொரோனா அச்சுறுத்தல் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனா வைரஸுக்கு எதிராக நடத்தப்படுகிற இந்தப் போர், ஒரு தலைமுறையின் போராக அமைந்துள்ளது. கொரோனா ஒரு தொற்று நோய் ஆகும். இது பெரும் சுகாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இதன் தாக்கங்கள் மிகவும் தொலைநோக்கு உடையவையாக இருக்கின்றன.
இந்தத் தொற்று நோய், சர்வதேச அளவில் அமைதியையும், பாதுகாப்பையும் பராமரிப்பதில் ஒரு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. சமூக அமைதியின்மைக்கும், வன்முறைக்கும் இது வழிநடத்தும். இதெல்லாம் கொரோனா வைரஸ் தொற்று நோயை எதிர்த்து போரிடுவதில் நமது திறனைப் பலவீனப்படுத்திவிடும்.
பலவீனங்களும், தயார்நிலை இன்மையும், இந்த தொற்றுநோய் ஒரு உயிரி பயங்கரவாத தாக்குதல் எவ்வாறு நடத்தப்படலாம் என்பதற்கான பாதையைக் காட்டுகிறது. இது ஆபத்துகளை அதிகரிக்கவும் கூடும்.
அரசு சாராக் குழுக்கள் (பயங்கரவாத குழுக்கள்), கொரோனா வைரஸ் போன்ற பேரழிவை ஏற்படுத்தக்கூடிய கடுமையான தாக்குதலை நடத்துவதற்கு வழியைப் பெறும். இது உலகமெங்கும் உள்ள சமூகங்களுக்கு பேரழிவை ஏற்படுத்தும். உலக நாடுகளில் உள்ள அரசுகள் அனைத்தும் கொரோனா வைரஸுக்கு எதிரான போரில் தீவிரமாகக் கவனத்தை செலுத்தி வருகிற போது, பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்துவதற்கான வழியைப் பெறலாம். இது வன்முறைகள் அதிகரிப்பதற்கும், அழிவுகரமான தவறான கணக்கீடுகளுக்கும் வழிவகுக்கும். இது ஏற்கனவே நடந்து கொண்டிருக்கின்ற போர்களை மேலும் சிக்கலாக்கும். கொரோனா வைரஸை எதிர்த்து நடத்துகிற போரையும் சிக்கலாக்கும் - என்றார். (ம)



## இங்கிலாந்துக்கும் இந்திய அரசால் மருத்துவ உதவி!

புதுடெல்லி, ஏப். 13
இங்கிலாந்துக்கு சுமார் 30 லட்சம் காய்ச்சல் மாத்திரைகளை ஏற்றுமதி செய்துள்ளது இந்தியா.
இங்கிலாந்தில் கொரோனா வைரஸ் தற்போது தலைவிரித்தாடுகின்றது. அங்கு சுமார் 80 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 10 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். நேற்றுமுன்தினம் மட்டும் 917 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.
இந்த நிலையில், கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் காய்ச்சலைக் குணமாக்கும் வகையில் சுமார் 30 லட்சம் காய்ச்சல் மாத்திரைகளை இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்துள்ளது இந்தியா.
கொரோனாவுக்குத் தற்காலிகமாகப் பயன்படுத்தப்படும் குளோரகுயின் மாத்திரைகளையும் இந்தியா உலக நாடுகளுக்கு வழங்கி வருகின்றது.
அமெரிக்காவுக்கு மட்டும் சுமார் 2.9 கோடி குளோரகுயின் மாத்திரைகளை இந்தியா வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இந்தியப் பொருளாதாரம் இன்னும் அடிவாங்கும்

## உலக வங்கி எச்சரிக்கை



புதுடெல்லி, ஏப். 13
இந்தியப் பொருளாதாரத்தை கொரோனா வைரஸ் மிக மோசமாக சீர்குலைக்கும், நாட்டில் முன்பு இருந்த பொருளாதார இடர்களை இன்னும் பெரிதாக்கிவிட்டுச் செல்லும் என்று உலக வங்கி எச்சரித்துள்ளது.
உலக வங்கியின் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
உலக நாடுகளை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் இந்தியாவிலும் அதன் தாக்கத்தை நாளுக்கு நாள் அதிகப்படுத்தி வருகிறது. இதுவரை 230க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர், 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 21 நாட்கள் லாக்டவுனை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது.
இந்த 19 நாட்களாக வர்த்தகம், தொழில், சிறு, குறுந்தொழில்கள், போக்குவரத்து, சிறு, பெருநிறுவன செயல்பாடுகள் அனைத்தும் முடங்கி, பொருளாதார சுழற்ச்சி தடைப்பட்டுள்ளது. இந்தியப் பொருளாதாரம் 2020ஆம் ஆண்டில் 5 சதவீதம் அளவுக்கு வளர்ச்சி அடையும் எனக் கணிக்கப்பட்ட நிலையில் 2021ஆம் நிதியாண்டில் அது 2.8 சதவீதமாக வீழ்ச்சி அடையும். இந்தியப் பொருளாதார வளர்ச்சி ஏற்கனவே குறைந்திருந்த நிலையில் இந்த கொரோனா வைரஸால் மிகவும் மோசமாக பாதிக்கப்படும் என்றுள்ளது. (ம)

## அன்று அஸ்வின் இன்று லையன்!
### ஹாக் கணிப்பு



புதுடெல்லி, ஏப். 13
டெஸ்ட் ஆட்டங்களில் தற்போது சிறந்த சுழல் பந்து வீச்சாளர் என்றால் அது நாதன் லையன்தான் என்று தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் பிரட் ஹாக்.
அஸ்வின், லையன் ஒப்பீடு தொடர்பில் பிரட் ஹாக் மேலும் தெரிவித்ததாவது:
ஆம் உலகின் சிறந்த டெஸ்ட் சுழல்பந்து வீச்சாளர் என்ற தகுதியை அஸ்வினிடமிருந்து தனதாக்கிக் கொண்டார் லையன். ஆனால் இருவரும் மேம்பாட்டுக்காக பாடுபடும் வழியை நான் பாராட்டுகிறேன். அஸ்வின் பெரும்பாலும் சுழலுக்கு ஏற்ற ஆடுகளங்களில் விளையாடி 71 டெஸ்ட்களில் 365 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். லையன் பெரும்பாலும் சுழலுக்கு ஆதரவற்ற ஆடுகளங்களில் வீசி 96 டெஸ்ட் போட்டிகளில் 390 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். அயல்நாடுகளில் அஸ்வின் சிறப்பாக வீசினாலும் அவரால் விக்கெட்டுகளை வீழ்த்த முடிவதில்லை, சமீபகாலமாக வேகப்பந்து வீச்சாளர்களுக்கு அஸ்வின் பக்கபலமாக செயற்பட நேரிடுகிறது என்பதும் ஒரு காரணம் - என்றார்.
(ம)

# தலைமுறையில் ஒருவர் டோனி!

## நாசர் ஹுசைன் பெருமிதம்

*லண்டன், ஏப். 13*

***டோ**னியிடம் இன்னும் திறமையும் வலிமையும் உள்ளது. அவரை சுதந்திரமாக விளையாட விடுங்கள். வலிந்து ஓய்வுக்குத் தள்ள வேண்டாம் என்று வலியுறுத்தியுள்ளார் இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் நாசர் ஹுசைன்.*



பிரபல கிரிக்கெட் இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் நாசர் ஹுசைன் மேலும் தெரிவித்ததாவது:
டோனி ஓய்வு பெற்றார் என்றால் அவரை மீண்டும் கிரிக்கெட்டுக்குள் கொண்டுவர முடியாது. கிரிக்கெட்டில் சில லெஜண்ட்கள் உள்ளனர். தலைமுறைக்கு இவரைப்போன்ற ஒருவர்தான் வருவார்கள், அவரை விரைவில் ஓய்வுபெற வைத்து விடாதீர்கள். டோனி என்ன நினைக்கிறார் என்பது அவருக்குத்தான் தெரியும்.
"டோனியால் இன்னமும் பங்களிப்பு செய்ய முடியும் என்று நினைக்கிறீர்களா?'' அதுதானே உங்கள் கேள்வி. நான் பார்த்தவரையில் டோனி பெரிய அளவில் இன்னமும்கூட பங்களிப்புச் செய்ய முடியும் என்றே கருதுகிறேன். டோனி இன்னமும் திறமைசாலிதான் - என்றார்.
இங்கிலாந்தில் கடந்த வருடம் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் டோனி இறுதியாக விளையாடினார். அதன் பின்னர் அவர் அணிக்குள் உள்வாங்கப்படவில்லை. டோனி ஓய்வை அறிவிக்க வேண்டும் என்று முன்னாள் வீரர்கள் பலரும் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் பல்லாயிரம் ரசிகர்களின் எதிர்பார்ப்போ அவர் மீண்டும் களத்துக்குத் திரும்ப வேண்டும் என்பதாகத்தான் உள்ளது. இந்த நிலையிலேயே நாசர் ஹுசைன் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம)

## பிளின்டொப் பந்துவீச்சை எதிர்கொள்ள அஞ்சினேன்
### பொண்டிங் வெளிப்படை



சிட்னி, ஏப். 13
தனது கிரிக்கெட் வாழ்க்கையில் தான் எதிர்கொண்ட மிகக் கடினமான பந்து வீச்சு என்றால் அது இங்கிலாந்து வீரர் பிளின்டொப்பின் பந்துவீச்சுத்தான் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலியாவின் முன்னாள் அணித் தலைவர் பொண்டிங்.
பிளின்டொப்பின் பந்துவீச்சு குறித்து பொண்டிங் மேலும் தெரிவித்ததாவது:
'எனது கிரிக்கெட் வாழ்க்கையில் நான் எதிர்கொண்டதிலேயே மிகவும் கடினமான பந்துப்பரிமாற்றம் பிளின்டொப்புடையதுதான். மணிக்கு 90 மைல் வேகத்தில் உட்திரும்பல், வெளித்திரும்பல் பந்துகளை பிளின்டொப் சாதாரணமாக வீசுவார். ஆஷஸ் ஆட்டங்களில் பிளின்டொப் என்னை அச்சுறுத்துவார் - என்றார்.
(ம)

## ஐ.பி.எல் தொடர் காலவரையின்றி பிற்போடப்பட வாய்ப்பு உள்ளது!

புதுடெல்லி, ஏப். 13
இந்தியாவில் ஊரடங்கு உத்தரவை மேலும் இரண்டு வாரங்கள் நீடிக்கப்பட முடிவுசெய்யப்பட்ட நிலையில், ஐ.பி.எல் தொடரை கால வரையின்றி பிற்போடப்பட வாய்ப்பு உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
மார்ச் மாதம் 29ஆம் திகதி ஐ.பி.எல் தொடங்குவதாகஇருந்தது. கொரோனா பரவல் காரணமாக இந்தத் தொடர் பிற்போடப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி (நாளைமறுதினம்) தொடர் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தியப் பிரதமர் மோடி, மாநில முதலமைச்சர்களுடன் நேற்றுமுன்தினம் நடத்திய பேச்சில் கொரோனா ஊரடங்கை மேலும் இரண்டு வாரங்கள் நீடிப்பதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இதையடுத்தே ஐ.பி.எல் தொடர் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் கங்குலிக்கும், ஐ.பி.எல் அணிகளின் உரிமையாளர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று இன்று இடம்பெறவுள்ளது. இந்தச் சந்திப்பில் ஐ.பி.எல் தொடர் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படலாம் என்றும் கருதப்படுகின்றது. (ம)





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.04.2020 இல் வெளியிடப்பெற்றது.